www.tamilarangam.net



# சிதைகளை அ
# புதைகுழிகள்

வீதிகளில் குந்தியிருந்து
உயிர் வதைத்த தடையரண்களை
அகற்றும் வழிமுறை
ஷமகஜர்' களிலுள்ள கோரிக்கைகளிலல்ல
எம் நெஞ்சிலிருக்கிறது.
தொட்டிலிட்டுத் தாலாட்டிய,
காலாறியமர்ந்த,
உடற்கட்டை வேகிய நிலத்துக்கு
போகும் விருப்பு
ஒப்பந்தங்களில் மட்டுமல்ல
எம் உள்ளத்து நெருப்புகளில்
அடை காக்கின்றது.

தலையாட்டியவர்களையும்
எட்டப்பன் பணி செய்தவர்களையும்
கூடியிருந்து குழி பறித்தோரையும்
உலகத்திலிருந்தே அகற்றும் வழி
ஆர்ப்பாட்டங்களிலல்ல
எங்கள் துப்பாக்கிகளில் தடங்கியிருக்கிறது.

படகோடு கடலேறவும்
திடமோடு ஊர் சேரவும்
யாரையும் கெஞ்சியிருக்கவில்லை
இதுவரையும்.

விதைக்கப்பட்டவர்களின்
கனவு இன்னும் நிறைவுறவில்லை.
புதைக்கப்பட்டவர்களின்
எச்சங்களை எடுத்து
உரிய கடன் புரியவில்லை.
விரிசல் விழுந்துள்ள வீட்டை
சென்றுதன்னும் பார்க்கவில்லை.

மாமர வகுப்புகளுக்கு
மாற்றிடம் கிடைக்கவில்லை.
சிறைக்கம்பிகளின் பின்னே தொலைந்த
வாழ்வுக்கு மீட்சி கிடைக்கவில்லை.
பத்தொன்பதிலிருந்து கூட முன்னேறாததாய்
புத்தாயிரத்திலும் உள்ளன
எங்க;ர்கள் பல.
எதிலும் ஒட்டாமல்
அந்தரிப்புகளுடன் நகர்கிறது
எங்கள் காலம்.

ஆயினும் பேசினோம்.
உடன்பட்டோம்.
கோரிக்கை விடுத்தோம்.
மனுக் கொடுத்தோம்.
திரண்டெழுந்து ஊர்வலம் போனோம்.
எங்களுக்குத் தெரிந்தது
இவைமட்டுமல்லவென்று
உலகுக்கே நன்றாய்ப் புரியும்.
பின்னும் ஏன்
எம் கோபங்களை எரிக்க முனைகிறீர்.

ஊர் சுற்றவும் உலாப் போகவும்
சாமான்கள் வாங்கவும் - இங்கு
சண்டை நிறுத்தவில்லை.

எரிகணைப் புகை கவிந்த காலத்தில்
அடுப்புகள்தான் பலவேளை எரியவில்லை.
இன்று மனங்கள் எரிகின்றன.
கூரையற்ற வீட்டில்
தாரகைகள் அன்று சிரித்தன.
நம்பிக்கை வானில் இன்று
மின்மினி கூட மிளிரவில்லை.

காயங்களிலிருந்து உதிரம் பெருகியது.
நிலக்குழிகளில் உடல்கள் விழுந்தன.
இன்று ரணங்கள் வலிக்கின்றன.
மனக்குழிகளில் கனவுகளும் நம்பிக்கைகளும்
வீழ்ந்து மண்மூடி

## எங்களுக்கா
## இனி உங்



வேதனைகளே முளைக்கின்றன.

எவரதும் வாழ்வு பற்றிய
அச்சமும் பொறாமையும்
எங்களுக்கு இல்லை.
எந்த மேடைகளிலும் அமைதிக்கெதிராய்
நெருப்புத் துண்டங்களை நாம்
வீசியெறிந்ததில்லை.
எங்களுக்காக குரல் கொடுத்தோமே தவிர
வன்மத்தையும், வக்கிரத்தையும்
வார்த்தைகளில் விதைக்கவில்லை.
எங்கள் துப்பாக்கிகள்கூட
சன்னங்களை மட்டுமே துப்பியது
இனவாதத்தையல்ல.
சாக்குரல் மேவிய பூமியிலிருந்தும் சிரித்தோம்.
போர்க்கருவிகள் ஓய்ந்தபொழுதில்
நிம்மதிகளைத் தொலைத்தோம்.
எங்கள் பாதைகளில் இப்படித்தான்
முன்பும் அழகிய பூப்பாறைகள் முளைத்தன.

காலக்கடிகாரத்தை உலுப்பி அடித்து
வேகப்படுத்தி ஓடவைத்து
இழுபட்டுக் கொண்டிருக்கும்
இருளுக்கு முடிவு கட்டுவோமென
ஒலிக்கிறது மனக்குரல்.

வரலாறு வழிகாட்டியென
எமது வரலாற்றுக்கு வழிகாட்டுபவன்
சுண்டுவிரல் அசைக்கும்பொழுது
சூறாவளிகள் புறப்படத் தயாராக உள்ளன இங்கு.

சிதைகளை அடுக்குங்கள்.
புதைகுழிகள் வெட்டுங்கள்
எங்களுக்காக அல்ல
இனி உங்களுக்காக
யாரெவர்எம் நிம்மதிகளில்
உரிமை வாழ்வில்
நெருப்புமிழ்கிறார்களோ
அவர்கள் எல்லோரும்.
புதைகுழிகள் வெட்டுங்கள்
சிதைகளை அடுக்குங்கள்.
எங்களுக்காக அல்ல
இனி உங்களுக்காக.

—— அம்புலி——

www.tamilarangam.net






செல்லும் இடமெல்லாம் வெற்றுநெற்றியுடன் ஒரு பெண். வயது வேறுபாடின்றிக் காணப்படும் இப்பெண்களிடம் கண்களிலும் ஒரு வெறுமை, ஏக்கம், கணவனை இழந்தது மட்டுமல்லாமல் சமூகத்தினாலும் ஒதுக்கப்படும் கொடுமையொன்று சத்தமில்லாமல் நடந்து கொண்டிருக்கிறது.

நோய்,இராணுவத்தின் கொடூரத்தாக்குதல்கள்,போராட்ட கால நிர்ப்பந்தங்கள் எனப் பலவற்றிற்கு அக்கணவன்மார் பலியாகி இருந்தனர்.

கணவன் இறந்ததற்காக அப்பெண்ணிற்கு சொல்லப்பட்ட உண்மையும் பொய்யுமான பல காரணங்கள் காலத்தால் அழியாத வடுக்களாக அப்பெண்ணையும் பிள்ளைகளையும் தொடர்ந்து வந்து துன்புறுத்திக்கொண்டிருக்க, சமூகம் அக்காரணத்தைச்சொல்லி அக்குடும்பத்தை நிந்திக்கும் அதே வேளை அப்பெண்ணையும் ஒதுக்கி விடுகிறது.

பொட்டிழந்தவள், பூவிழந்தவள், விதவை எனும் பதங்களைப் பெருமளவில் பயன்படுத்தாத போதும் ஆழ்மனங்களில் பதிந்து போயிருக்கும் கருத்துப்பதிவுகள் வலிமையானவையாய் மனங்களை வருத்துகின்றன.

சிறுவயதிலிருந்தே என்னுயிர்த் தோழியாயிருந்த ஒரு பெண்ணை நீண்ட ஏழு வருடங்களின் பின் சந்திக்க நேர்ந்தது. எப்படி அவளை எதிர்கொள்ளப்போகிறேன் என்ற எனது பயத்திற்கு எவ்வித தேவையுமில்லாமல் வெறுமே ஒரு புன்னகையுடன் எதிர்கொண்ட அவள் முகத்தில் குவிந்திருந்தது கணவனை இழந்த சோகம் மட்டுமே என எண்ணியிருந்த எனக்கு அதன் பின்னிருந்த வரலாறு அதிர்ச்சி தருவதாய் இருந்தது.

பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்புவதற்குப் படலைக்கு அவள் வரும் நேரந்தவிர்த்தே வெளியே புறப்படுவாராம் முன்வீட்டுக்காரர்.

தலையலங்காரங்களுக்கான பூமாலைகளை விதவிதமாகக்கட்டுவதில் தேர்ச்சி உடைய அவளுக்கு அது ஒரு பொழுதுபோக்கு. தான் சிறுபெண்ணாக இருந்த காலந்தொட்டே உறவுகளுக்கு இதனை விருப்புடன் செய்து கொடுப்பாள். கணவனை இழந்த பின் உறவுப் பெண்ணொருத்தியின் பூப்புனித நீராட்டு விழாவிற்கு அவள் கட்டிக்கொடுத்த பூமாலையில் இருந்த பூக்கள் உதிர்ந்த போது,சூழ நின்ற உறவுகள் ஷஅவளைக்கொண்டே கட்டினீங்கள் நல்ல காரியங்களுக்கு அவளைக்கொண்டு கட்டுறதே? அது தான் பூ உதிருது' எனத் தன் காது பட விமர்சித்ததைக் கூறியபோது அவள் கண்களில் வேதனை.

தன்னுடைய உறவுகளே இப்படி விமர்சிக்கும்போது மற்றவர்களை ஏன் குறை விளங்குவான் என்று நானே ஒதுங்கி விட்டேன் என வயதுக்கு ஒவ்வாத முதிர்ச்சியுடன் கூறினாள்.

வளமானதொரு வாழ்க்கை முறையைக்கொண்டிருந்தும் கூட விசேடதினங்கள் விழாக்களில் வெற்று நெற்றி, கடிகாரம் கூடஇல்லாத வெறுங்கையுடன், தான் இழந்ததை எண்ணிய வேதனையில் கலங்கிய கண்கள், வாடிய முகத்துடன் இருக்கும் அவள்மேல் விழும் பொறாமைக் கண்கள் ஏராளம். தன் வளமான வாழ்க்கை மேலான அப்பொறாமைதான்இத்தகைய விமர்சனங்களுக்குக் காரணம் என்பதை உணர்ந்தும் கூட அவற்றிற்குப் பயப்படும் நிலையை சமூகம் தோற்றுவித்திருந்தது.

தான் விரும்பியதை அணியமுடியாத, வயதுக்கேற்ற விதத்தில் தன்னை அழகு படுத்த முடியாத ஆதங்கம், ஏக்கம், கணவன் அற்ற தனிமை, ஐந்து சிறுகுழந்தைகளுடன் போராடும் சுமை அனைத்தும் சேர்ந்து சில சமயங்களில் தலையைப் பிய்த்தபடி குழறி அழும் போது விரைவில் அவளுக்கு மனநோய் வந்து விடுமோ எனும் பயம் எனக்கு வருவது வழமை.

மறுதிருமணம் செய்ய விளையும் பெண்ணை நடத்தை சரியில்லாதவளாகவும் குழந்தைகளின் மேல் அக்கறை இல்லாதவளாகவும் கணிக்கும் சமூகம் அப்பெண் தன் மனதில் உள்ளதை வெளிப்படையாகக் கதைக்கும் துணிவை அழித்து விடுகிறது.

மூன்று குழந்தைகளுடன் கணவனை இழந்த சிறுவயதுப்பெண்ணொருவர் மறுதிருமணம் செய்ய விரும்பியதும் குடும்பத்தினரின் எதிர்ப்புக்கு உள்ளானதும் நான் சிறு பெண்ணாக இருந்த போது நடந்தது. கணவனின் குடும்பத்தின் ஆதிக்கத்திலிருந்து விடுபட்டு தனது பங்குச் சொத்தைப் பிரித்து பெருமளவு சொத்துடன் மறுமணம் செய்த போது ஊரும் உறவும் ஷஷஇவளுக்கு விளங்கேல்லை. பிள்ளையளைப் பற்றி யோசிக்காமல் கட்டுறா சொத்தைப் பறித்துக் கொண்டு அவன் கைவிட்டு விடுவான்...'' என வாழ்த்தியதை சவாலாக எடுத்துக்கொண்டு வாழத் தொடங்கியது ஞாபகத்திற்கு வந்தது. மிகுந்த ஆர்வத்துடன் அப்பெண்ணைப் பற்றி விசாரித்தேன். வளமானதும் நிறைவானதுமான ஒரு வாழ்க்கையை அப்பெண் வாழ்வது தெரியவந்தது. தனக்குரிய பொருத்தமான வாழ்க்கையைத் தெரிவு செய்யும், சமூகத்தை எதிர்க்கும் துணிவு அப்பெண்ணுக்கு இருந்தமை மன அழுத்தங்களிலிருந்து விடுபடவும் நிறைவான வாழ்க்கையை அமைக்கவும் உதவியாக இருந்தது.

நானறிந்த பெண்ணொருவரின் கணவரின் சாவீட்டில் கலந்துகொள்ள நேரிட்டது. நான் அறிந்த காலத்திலிருந்தே தனது தோட்டத்தில் கடுமையாக உழைக்கும் அப்பெண் நகைகளோ பொட்டோ எதுவும் அணிவதில்லை. வெய்யிலில் வியர்க்க நின்று வேலை செய்யும் தனக்கு அது தேவையில்லை என அப்பெண் கருதியிருக்கலாம். நடுத்தரவயதில் கணவன் இறந்த போது புதிதாக ஒரு பொட்டை வைத்து பொட்டழிக்கும் சடங்கை நிறைவேற்றிய போது பொட்டும் சடங்கும் கற்பிதங்களால் உருவான அர்த்தத்தை இழந்தது. வறுமையின் நிமித்தம் தாலி எப்பொழுதோ காணாமல் போயிருந்ததால் அதுவும் கற்பித அர்த்தத்தை இழந்தது.

கற்பிதங்களால் அர்த்தம் பெறுவனவற்றை பெண்ணின் விருப்பு வெறுப்புகளைப் பொருட்படுத்தாத அளவிற்கு முக்கியத்துவம் கொடுக்கிறது சமூகம்.

கணவனின் இறப்பின் பின் தனது வாழ்க்கையைத் தீர்மானிக்கும் உரிமையை பெண்ணுக்கு வழங்குவதுடன் அவளெடுக்கும் முடிவிற்கு உறுதுணையாய் இருக்கும் மனிதாபிமானத்தைப் பெற உறவுகளும் சமூகமும் முயற்சிக்க வேண்டும். இதன் மூலமே தமிழ்ச்சமூகத்தில் நிறைந்திருக்கும் வெற்று நெற்றிப் பெண்கள் வேதனைப் பெருமூச்சுக்களில் இருந்து விடுபட்டு தன்னம்பிக்கையுடன் புதிய வாழ்வை அமைக்க முன்வருவார்கள்.

இது, தனிமையையும் அது தரும் வெறுமையையும் போக்கவெனத் துணை தேடி மறைமுகமாக நெறி பிறழ்தலில் இருந்து பெண்களைத் தடுக்கும். ●

—— கு.தீபா

www.tamilarangam.net



# தீச்சுடர்

பானுவும் மங்கையும் காட்டுக்குள் அல்லாடிக் கொண்டிருந்தனர். இந்தப் பாதையால் போனால் எந்தக் குளக் கட்டில் முடியும் என்பதுதான் வன்னி க்காட்டின் ஒற்றைத் தடங்கள். ஏன்... அனைத்தும் காட்டு விலங்குகள் நீர் குடிப்பதற்காக நடந்து சென்றவைதான். அவை குளங்களில் அல்லது நீரோடை களில்தான் முடியும்.

பானுவும் மங்கையும் அந்தத் தடங்களில்தான் பகல்முழுதும் நடந்தார்கள். அதுவோ மீண்டும் மீண்டும் ஒரே கூமா மரத்தடியில் வந்து நின்றது.

ஷஷஇனி ஏலாது. நான் இருக்கப் போறன்'' என்றாள் பானு.

வேட்டுச்சத்தங்களை எதிர்த்து நடந்து வெகுதூரம் வந்து விட்டதை மெல்லிதாக எட்டத்தில் கேட்கும் வேட்டுக்கள் உறுதி செய்தன.

இயலாது என்று உட்கார்ந்து விட்ட பானுவைத் தொடர்ந்து மங்கையும் உட்கார்ந்தாள். மாலை ஐந்து மணியை நெருங்கிக் கொண்டிருந்தது. காட்டின் மேற்பரப்பை இருள்மூடி ஏழு எட்டு மணியாகிவிட்டது போலிருந்தது. தீக்கங்கு போல ஆங்காங்கே சிறு இடைவெளிகள் ஊடாக மேற்கே வந்த ஒளியைக் கொண்டு... அந்தப் பக்கம்தான் தாங்கள் போகவேண்டிய இடம் என்பதைக் கணித்த மங்கை; ஷஷபானு எழும்பு இந்தா இந்தப் பக்கம்தான் நடப்பம் இருள முன்னம் வெட்டைக்குப்போக'' என்றாள்.

பானு அலுப்புடன் எழுந்தாள். நேற்று முன்தினம் இருந்தே சரியான உணவு இல்லை. இன்றும் எந்த உணவும் இல்லை. இதைவிடப் பதற்றம் வேறு. ம்... என்றவாறு ஒரு பெருமூச்சு விட்டவள் எட்டி அருகிலிருந்த கிளைகளை விலக்கியவாறு நடக்கும் மங்கையை பின் தொடர்ந்து நாலடி வைத்திருப்பாள். காடே அதிரும் வண்ணம் பெரிய சீறல்ஒலி எழுந்தது.

ஷஷயானை...'' மங்கை நின்றாள். சீறலைத் தொடர்ந்து திடுதிடென யானைகள் ஓடும் சத்தமும், கிளைகள் முறியும் சத்தமும் கேட்டன.

மங்கை பானுவைத் திரும்பிப் பார்த்தாள். அவளுடைய முகத்தில் அச்சம் தெரிந்தது. இன்னும் காட்டுக்குள் என்னென்ன இருக்குமோ.

ஷஷவேண்டாம் இருளுது இப்பிடியே இருந்திட்டு விடியப்பாப்பம்'' என்றாள்.

ஒரு சரிவான மரத்தடியை இயன்றளவு சருகுகளைத்தள்ளி ஒழுங்கு பண்ணிவிட்டு அதில்படுத்துக் கொண்டார்கள். இரவானதும் வேட்டுச் சத்தங்கள் ஓய்ந்து போயிருந்தன. பகல் முழுதும் அலைச்சல் பானுவையும் மங்கையையும் விடிந்தும் எழும்ப விடவில்லை. கைகால்கள் அசதியாக இருந்தாலும், உரிய இடத்துக்குப் போகவேண்டிய தேவை அவர்களை எழுந்து நடக்கத் தூண்டியது.

சரியோ பிழையோ மேற்கு நோக்கி நடப்போம் வருவது வரட்டும் என்று நினைத்தவர்கள் நடக்க ஆரம்பித்தனர்.

ஒரு மணித்தியாலத்தில் பெருங்காடு மந்துக்காடாக மாறியது. பானுவுக்கு மிக்க மகிழ்ச்சியைக் கொடுத்தது. இன்னும் சிறிது தூரம் செல்ல சேனைப்புலவொன்று வந்தது.

நல்ல காலமாக விதைப்பின் பின்னான விளைவாக கெக்கரி போட்டிருப்பார்கள் போலும் ஒருகொடி நான்கு பழங்களுடன் காய்ந்து சுருண்டு போய்க்கிடந்தது. பானு பாய்ந்துபோய் ஒருசிவந்த கெக்கரிப்பழத்தைத் திருகியவள் ஆவலுடன் அதைக்கடித்தாள். மங்கைக்கும் ஒன்றைத் திருகி எறிந்தாள். இரண்டு நாட்பசிக்கு இதமாக இருந்தது. கெக்கரிக்காயைச் சாப்பிட்டானதும், இந்த சேனைப் புலவுக்கு உரியவர்கள் யாரும் வருவார்கள். வந்தால் அவர்களிடம் இது எந்த இடம் என்று கேட்டறிந்தால் எங்களுடைய இடத்துக்குப் போய் விடலாம் என்று நினைத்தாள் மங்கை.



பானு சிரித்தாள். அப்படி யாரும் வர மாட்டார்கள். ஏனென்றால் இது வைகாசி மாதம் ஆடிக்குப் பிறகுதான் மந்து கொத்த யாரும் வரலாம். தை மாசியில் சேனைகளின் அறுவடை முழுதாக முடிந்துபோகும். அதன் பிறகு இங்கு மனித நடமாட்டம் என்பது பாலை பழுத்தால், இலுப்பை பூத்தால் என்று குறைந்துவிடும். எப்போதாவது வேட்டைக்கு யாரும் வரலாம். அதுவும் இப்போது மக்களிடம் துப்பாக்கி இல்லாததால் இல்லை.

ஷஷயார் வரப்போகினம். இந்த வண்டில் பாதைய வச்சு நடக்கவேண்டி யதுதான்...''

ஷஷமுதல் தண்ணி வேணும்..''

வண்டிப்பாதையைத் தொடர்ந்து செல்ல பறங்கியாற்றின் கரையை அது கடந்தது. கோடை ஆரம்பம். முழங்கால் அளவு நீரே பாய்ந்து கொண்டிருந்தது. ஆவலுடன் அதில் இறங்கி முதல் கைகளை அலம்பிவிட்டு வயிறார அள்ளிக் குடித்தனர். இப்போது முகத்துக்கும் நிரம்ப நீரை அள்ளி தெளித்துக் களைப்பை போக்கியதுடன் கால்களுக்கும் கைகளுக்கும் கூட தாராளமாக தண்ணீரை அள்ளி சொரிந்து கொண்ட போது.

பற்றைக்குள்ளிருந்து இரண்டு சோடிக்கண்கள் இவர்களைக் கவனித்துக் கொண்டிருந்தன. ஷஷயாராயிருந்தாலும் என்ன'' என்பது போலல்ல, தோள்களில் தொங்கிய துப்பாக்கியும் உருமறைப்பான உடையும் அவர்கள் அவதானத்துடன் கவனித் தனர் எனக்கூறியது.

மெல்லத்தலையை நிமிர்த்திய பானு சட்டெனக் கொடிக;டே திரும்பியவனைக்கண்டு அதிர்ந்தாள். ஷஷஓ... மங்கை...'' எனக்கிசுகிசுத்தவள் சட்டென துப்பாக்கியைச் சரித்தாள். அதற்குள் ஷஷஅக்காக்கள் அது நாங்கள்...'' எனக்கூவினான் ரதன்.

ஷஷஹக்.. ரதனண்ணை. இதுக்க என்ன செய்யிறியள்'' என்றாள் மங்கை.

ஷஷம்... உங்களப்போலதான் நாங்களும் காடளக்கிறம்''

ஷஷஏதும் கண்டு பிடிச்சனீங்களோ. இல்லையக்கா... புளியம்பழம் அஞ்சாறு கிடக்கு தரவோ'' என்றபடி வெளியே வந்தான் ரதன். அவனோடு இன்னுமொரு போராளியும் நின்றான். இப்போது மங்கை சொன்னாள்.

ஷஷஇந்தக் காட்டுக்குள்ளாகப் பாயுற ஆறு பறங்கியாறு. இது நொச்சிமோட்டையால வருது. மூன்று முறிப்புக்கருகிலயும் போகும். இப்பிடியே மேற்கால இந்த ஆற்று வழியா நடந்தா... ரோட்டுக்குப் போயிரலாம்.'' ஷஷஓ...'' என்றதை ஏற்றுக்கொண்டான் ரதன்.

எல்லோருமாக ஆற்று வழியாக நடக்கவாரம்பித்தனர்.

பகல் பதினொரு மணிக்கு அவர்கள் சின்னவலயன்கட்டு என்ற கிராமத்தை அடைந்தனர்.

இதே ஆற்றில் குதித்து கிழக்கு நோக்கித் தப்பியோடியது சிங்கள இராணுவம்.

ஆம். ஷவன்னி விக்ரம' என்ற பெயரில் மேற்கொள்ளப்பட்ட அந்த இராணுவ நடவடிக்கையை விடுதலைப் புலிகள் முறியடித்து விட்டனர். தாக்குதலுக்கு முகம் கொடுக்க முடியாது ராணுவம் தப்பியோடி விட்டது என்ற செய்தி தாமதமாகத்தான் பத்திரிகையில் வந்தது.

மீண்டும் தத்தமது இடங்க ளுக்குச் செல்ல முயன்ற மக்க ளைச் சென்று பார்வையிட்டாள் நளா யினி.

இதற்கிடையில் நாம் மகாலிங்கம் தவறவிட்டு விட்டு வந்த செல்லையாப்புவையும் இப்போது தான் காண்கிறோம். செல்லையாப்பு இந்த நான்கு நாட்களாக இராணுவத்தினரிடம் நின்றுவிட்டு இப்போது தான் வருகிறார். என்ன... சண்டை துவங்கிய நாள் மேச்சலுக்கு விட்ட மாடுகளைப் பிடித்துக் கொண்டு வருவதாகக் கூறிவிட்டுப் போனவர்தான். போய் ஒரு சிறிது நேரத்தில் மகாலிங்கமும் வண்டி கட்டிக்கொண்டு புறப்பட்டு விட்டார். மகாலிங்கம் வெளியேறிய கையோடு மளமளவெனப் பறந்து வந்த குண்டு வீச்சு விமானங்கள் செல்லையாப்புவின் வளவில் மட்டும் ஆறு குண்டுகளைப் பொழிந்தன. பக்கத்தில் இருந்த விதானையார் வீட்டில் ரெண்டு குண்டுகள் வீழ்ந்தன. எல்லோர் கண்ணும் படும்படியாக இருள் மண்டிய தென்னஞ்சோலைகள் நார்நாராய்க் கிழிக்கப்பட்டன. தேடாக் கயிற்றை திருகணையாக்கிக்கொண்டு செல்லையாப்பு மாட்டைத் தேடிக் கொண்டு மந்துக் காடுகளினூடாகப் போய் வயல் வெளியில் மிதந்தார். பச்சை உடையுடன் சிலர் நின்றனர். வோக்கிடோக்கியில் கதைத்தபடி நின்றவர்கள் புலிகள்தான் எனச் செல்லையாப்பு கருதினார். அவர்களில் ஒருவன் அவரைக் கண்டுவிட்டு... ஷஷகொஹெத யன்னே சீயா..'' என்றான். செல்லையாப்புக்கு விசர் வந்துட்டுது.

ஷஷஆங்... அங்காலை ஆமி வந்திட்டானம். உதில நிண்டென்ன வாய் பாக்கிறியளே... வெறுவாக்கில கெடுவாரே''

என்றார். சடசடவென அவரைச் சூழ்ந்தனர் சிறிலங்காப்படையினர்.

■

**தமிழ்க்கவி**

www.tamilarangam.net



# மரபு காணாத பெண்மை - புதி



கலாநிதி - மனோன்மணி சண்முகதாஸ்

அழகு தமிழிலே ஆயிரம் பாடல்களுக்கு மேல் எழுந்த சங்ககாலம் இன்று மீண்டும் நினைவுபடுத்தப்படுகிறது. ஈகைக்கு ஒரு உன்னதமான சிறப்பு இருந்ததை உணர முடிகிறது. ஊரின் வளம் சிதையப் போர் நடந்ததை புறநானூறு தொகுத்துக் காட்டியது. எல்லை தாண்டிய எதிரியை எதிர்த்துப் போராடிய மறவர் வீரத்தை எமக்கு விளக்கி நின்றது. ஏற்றம் பெற்ற தமிழர் எல்லைக்காவல், எமது தமிழ் மண்ணை நிலைத்து நிற்கச் செய்த வீரவரலாறு விதந்து பேசப்பட்டது. ஐயமின்றி எமது முன்னோர் வாழ்வியலில் அகமும் புறமும் செய்யுளிலே அமைத்த புலமையாளர் வரிசையிலே எமது வரலாற்றுத் தடத்திலே நிறுத்தி ஒரு புதிய மரபை எடுத்துக் காட்ட வேண்டியது தமிழ் அறிந்தவரது இன்றைய தலையாய கடமை யாகும்.

வீரமும் தீரமும், அருளும் அன்பும், ஆண்மையும் ஆற்றலும், பண்பும் பாசமும், பாட்டும் பாவலரும் இசையும், அரசும் நாடும், மக்களும் மன்னரும் உயிர்ப்புடன் உலவிய காட்சியை பழைய புறநானூறு படிக்கும் ஒவ்வொருவரும் தமது மனத்திரையிலே கண்டு வியக் கலாம். இமயம் வட எல்லையாக குமரிக்கோடு தென் எல்லையாக கிழக்கே கடல் எல்லையாக மேற்கும் கடல் எல்லையாக தமிழர் தேசம் பரக்க ஆண்ட மன்னர் பற்றிப் பேசியது புறநானூறு. நிலம், வான், சுவர்க்கம் என்ற மூவுலகத்தும் கீழே பாதாள உலகத்தும் சுவர்க் கத்தின் மேலாகிய ஆனிலை உலகத்தும் புகழ்பெற்ற பேரரசன் எனப் புலவர் தமது மன்னரைப் பாடினர். அவர்களது பாடல்கள் ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டவை. ஒரு இனத்தின் வீர உணர்வைப் பிறர் ஓரங்கட்டி விடாமல் ஆவணப்படுத்தியவை. கால நூற்றாண்டுக்கு முன்னைய காலம் தமிழர் வீரஉணர்வைத் தாங்கிநின்று தமிழரை உலகறிகு இனங் காட்டியவை. கடல் சூழ வானம் கவிய விளங்கிய தமிழ் நிலத்தை சர்வதேசமும் அறிய அவை துணை செய்தன.

இன்று தமிழர் வரலாற்றுத் தடத்திலே மீண்டும் வீரம் செறிந்த காலம். தமிழர் தாயகம் பற்றிய எண்ணம் தமிழரிடையே தோன்றும் காலம். தமிழர் வாழ்வியல் சிதைவுற்றதை நாம் வாழும் காலத்திலே உணர ஒரு போர்க்காலம் உருவாகியது. கண்முன்னே காலன் வயப்பட்ட உயிர்களைக் கண்டு மக்கள் மனமிடிந்தனர். இயல்பு வாழ்க்கையைக் குலைக்க என ஒரு எதிரி தோன்றினான். அவனை விரட்டவென வீரர் பலர் திரண்டனர். கரந்தடி நிலையிலே மண்ணை மீட்கப் போராடினர். எதிரியின் படைபலத்தை முறியடிக்க நேரடிச் சமரும் நடைபெற்றது. களங்கள் பல உருவாக நிலங்களின் வளங்கள் அழிய போராட்டம் தொடர்ந்தது.

புதிய வீரர் தலைமுறை ஒன்று முளைத்தது. இளமையைத் தள்ளி வீர உணர்வை மட்டும் வெளிப்படுத்தும் வீர மறவர்கள் தொகை பெருகியது. ஒப்பற்ற ஒரு தலைமையின் கீழ் ஒன்றுபட்டு எழுந்த வீரர் மண்ணைக்காத்து தமிழ் மக்கள் வாழ்க்கையை துன்பத்திலிருந்து மீட்கப் புறப் பட்டனர். நிலத்திலும், சூழக் கிடக்கும் கடலிலும் எதிர்ப்பு களைச் சந்தித்து முறியடித்தனர். மீண்டும் தமிழ் மண் வீரம் விளையும் நிலம் என்பது உறுதி செய்யப்பட்டது. களம் கண்ட வீரர் தமது உள்ளத்து உணர்வுக்கு ஒரு வடிகால் தேடிய போது தமிழ்க் கவிதை மலர்கள் களத்து மேட்டிலே பூத்துச் சொரியலாயின. மரபு மாற்றிய பெண் போராளி களின் உள்ளத் திலே மலர்ந்த கவிதைகள் ஒரு புதிய புறநானூ ற்றுத் தொகுப் பை உலகளுக் குத் தந்தன. பழைய புற நானூற்றுத் தொகுப்பிலே களமாடிய பெண்கள் யாரும் குறிப் படப் படவில்லை. ஆனால் புதிய புறநானூற்றுத் தொகுப்பிலே மரபுக்குப் புறம்பாக களத்திலே நின்று சமர் செய்த பெண் போராளிகளின் செய்யுள்கள் அமைவது ஒரு தனிச்சிறப்பாகும். அவற்றுள் சிலவற்றை நோக்கும் போது இது நன்கு உணரப்படும்.

நாம் வாழ்ந்த காலத்தில் நடந்த ஆனையிறவுச்சமர் பற்றி களத்திலே நின்ற போராளிக் கவிஞர்கள் பாடினர். தமிழரின் வீரவரலாற்றை நாம் வாழும் காலத்திலேயே தரிசிக்க நாம் கொடுத்து வைத்தவர்கள். உலகப்போர் நடந்தபோது வாழ்ந்த தமிழர்கள் இந்த ஆனையிறவுச் சமர் நடந்தபோதும் இருந்தார்கள். ஆனால் அவர்களின் உணர்வுநிலை வேறுபட்டிருந்தது. எமது மண்ணிலே எம்மை அழிக்கவென எதிரி முனைந்தபோது எமது மறவர் எதிர்நின்று போராடினர். ஆயிரக்கணக்கான மாவீரர்களின் வித்துடல்கள் மண்ணுக்கு அணி யாகின. அந்த வீரர் போராடிய களத்தை நேரில் காண வாய்ப் பற்றவர் கவிதையிலே காண வழிவகுத்த போராளிகள் பலர். அவர்களுள் சிலர் இன்று எம்முடன் இல்லை. மாவீரராய் தமிழர் வீரவரலாற்றில் பதிவாகி யுள்ளனர். ஆனால் அவர்கள் பாடிய கவிதைகள் எம்மை அவர்களை நினைக்க கருவிகளாய் உள்ளன.

ஷஷமீட்கப்பட்ட எம்
மண்ணில்
எங்கள்
கல்லறைகள்
கட்டப்பட்டால்
அவை
உங்கள்
கண்ணீர்
அஞ்சலிக்காகவோ
அன்றென் மலர்வளைய
மரியாதைக்காகவோ
அல்ல
எம் மண்ணின்
மறுவாழ்வுக்கு
உங்கள் மனவுறுதி
மகுடம் சூட்டவேண்டும்
என்பதற்காகவே''

ஆனையிறவுச் சமரிலே 15.7.1991 இல வீரச்சாவடைந்த கப்டன் வானதி எழுதிய இறுதிக் கவிதையின் ஒரு பகுதி இது. தன்னுடைய பணியை மண்ணில் நல்ல வண்ணம் நிறைவேற்ற வீர உணர்வின் தெளிவில் பிறந்த கவிதை இது. வீரனை நினைவில் நிறுத்தி வழிபட நடுகல் நாட்டும் பண்பாடு தமிழரிடையே இருந்ததை பழைய புறநானூற்றுப் பாடல்கள் கூறுகின்றன. ஆனால் அப்பாடல்கள் களமாடிய வீரர் களால் பாடப்பட்டவையல்ல. வானதியின் கவிதை களத்து நிலையைச் சொல்லும் விளக்க வுரையாக மட்டுமன்றி மற்றவர்க்கு ஒரு கட்டளையையும் விடுத் துள்ளது. தன்னுடைய நினைவைக் கல்லிலே நிறுத்தி மலர் மாலை சூட்டாமல் ஒரு மகுடம் சூட்டுவதைக் காட்டியுள்ளது. மண்ணின் மறு வாழ்வுக்கு மக்களுக்கு மனவுறுதியே தேவை. அந்த மனவுறுதியை அவள் சுட்டிக் காட்டியதுடன் மட்டுமன்றி இன்னொரு சவாலையும் எம் முன்னே விடுக்கின்றாள்.

ஷஷஇவே
எழுதாத என்
கவிதையை
எழுதுங்களேன்''

தமிழ்ப் புலமையாளரும் தமிழ் அறிஞரும் இச்சவாலை ஏற்கக் கடமைப்பட்டவர்கள்.

களத்திலே நின்று சமர் செய்த கப்டன் கஸ்தூரி தன் உள்ளத்து உணர்வை சில வரிகளிலே துல்லியமாய் சிறு கவிதையாய் எழுதி வைத்தாள்.

ஷஷதிங்களோ
துடிக்கப்பதைக்க
வதைத்துக்
கொல்லுங்கள்
அதனால் என்ன
துண்டிக்கத்
துண்டிக்கத்
துளிப்பார்கள் வீரர்கள்
எங்கள் எல்லை நீங்கி
உங்கள் படைகள்
ஓடும்வரை
எங்கள் வீரர்க்கு
இறப்பே இல்லை''

இலகுவான தமிழ் நடையில் கஸ்தூரி பாடிய கவிதை இன்று நனவாகியுள்ளது. அவளுடைய தீர்க்கதரிசனம் பத்து ஆண்டுகளில் பலித்துவிட்டது. தெளிவான உள்ளமும் தொலை நோக்கும் உள்ளவர்கள் வாக்கு நிச்சயம் பலிக்கும். ஆனையிறவுச் சமரிலே 11.7.1991 இல் வீரச்சாவினைத் தழுவிக்கொண்ட கஸ்தூரியினால் இறுதியாக எழுதி முடிக்கப்படாத கவிதை வரிகளிலே வீர உணர் வுக்கும் மேலாக மனத்து உரம் வெளிப்பட்டு நிற்கிறது. எதிரியைப் பார்த்துச் சொல்லும் செய்தி இன்று எமது மக்களால் அண்மையில் பொங்குதமிழ் நிகழ்விலே ஒன்று கூடிச் சொல்லப்பட்டது. ஷஷஎமது நிலம் எமக்கு மேண்டும்' என்ற உணர்வு நீண்ட காலமாக உறைந்து கிடந்தது. மக்கள் குரல் ஓங்கிப் பொங்கு தமிழாக பிரவாகித்தது. அது கஸ்தூரியின் கவிதையை எழுதி முடித்தது. வானதியின் கவிதையைத் தொடர்ந்து எழுத வைத்தது.

பெண்போராளிகளின் துணிவு சோழநிலாவின் கவிதைவரிகளில் எழுந்து நிற்கிறது.

ஷஷஎனது துப்பாக்கிக்
குண்டுகளால் முடியும்
எதிரியின்
முதுகுகளைக் கிழிக்க மட்டுமல்ல
எனது பிரதிநிதிகளாக
செயற்படவும்''

தன்னுடைய துப்பாக்கியின் செயற்பாட்டால் எதிரிகளை அழிப்பது மட்டுமன்றி உலகின் கண்களுக்கு உண்மையை உணர்த்தவும் முடியும் என்கிறாள். அவளது கவிதை வரிகளில் அந்த உண்மையை நாம் அன்று உணராவிட்டாலும் இன்று நடைமுறையில் கண்ணாரக் காண்கின்றோம்.

ஷஷஎனது விசைவில்லின்
அழுத்துகைகள்
உலகின் கண்களை
கட்டவிழ்க்கும்
எனது தேசியக்
கொடிக்கான நடு கம்பை
இங்கிருந்தே எனது
சுடுகலனால்
உலக முற்றத்தில் நான்
அமைப்பேன்.
அனைத்துலக
ஊடகங்களுக்கான
என் தேசச்செய்திகளை
என் சன்னங்களால்
அனுப்புவேன்''

வீரத்தை வெளிப்படுத்தும் அவள் கவிதையில் உயிர்த் தோழரின் பிரிவால் ஏற்பட்ட துன்பமும் சுடர் விடுகிறது. பழைய புறநானூறு பாடிய வீரத்தாய்மாரின் உணர்வின் நிழல் அதில் தெரிகிறது.

ஷஷஉயிர்த்தோழரைப்
பற்றி என்னுள் எழும்
செப்பமுடியாத
துயரில் வெடித்துச்
செந்தமிழில்
என் தோட்டாக்கள்
அழும்''

அவள் பிரதிநிதி காளாக சோகத் திலும் துணை நிற்கும் தோட் டாக்கள் பெண் மையின் மென் மையை மெல்லப் பறை சாற்றுகின்றன. கல்லுக்குள் ஈரம் கசிகிறது. உள்ளப் பாறையிலே ஒரு கோடாக நீரருவி ஊற்று வருகிறது. கடை விழியில் துளிர்க்கும் கண்ணீர் முத்துக்களைக் காணவைக்கிறது. பெண்ணின் தீரம் பற்றிப் பாடுகையில் ஷஷஎதைத்தான் பாடுவது'' அதையே தலைப்பாக்கி மலைமகள் கவிதை வரைந்தாள். கவிதை எழுத ஆயிரம் கதைகள். சுருக்கிச் சொல்லமுயன்றாள்.

ஷஷஆயிரமாய் வீரர்கள்
உயிர் கொடுத்துப்
பகையழிக்க
ஆனையிறவு
விழுந்தது
இந்து மா
சமுத்திரத்திலே
இன்னொரு நாடுருவாக
அத்திவாரம்
அமைந்தது
அவ்வளவே''

கவிதையிலே சொன்ன செய்தி இன்று தமிழர் வரலாற்றில் ஒரு மைல் கல். சென்ற காலத்தை நினைத்து வருங்காலத்தைச் செப்பனிடும் வழிமுறை. சமர் செய்து வெற்றியைத் தந்த வீரவேங்கைகளின் பணியின் கணிப்பீடு. இன்று புதிய புறநானூற்றின் மதிப்பீடு. போர்க்காலத்தை ஆய்வு செய்யும் திறனாய்வாளர்க்கு ஒரு திறவுகோல். எதிர்காலத் தலைமுறையினரை வியக்க வைக்கும் பெருநிகழ்வு. தமிழர் வீரவரலாற்றில் ஒரு புதிய படிக்கட்டு. ஆயிரமாயிரம் வீரரின் மூச்சுக்காற்றில் மண்வாழ்கிறது. அவர்கள் வித்துடல்கள் வளம் பெற்று எமது தலைமுறைக்கு நன்னிலமாய் நிற்கிறது. மரபு காணாத பெண்மையின் வீரம் கவிதையாய் தமிழர் நாவிலும் நெஞ்சிலும் நிறைய ஒரு புதிய புறநானூற்றுத் தொகுப்பு இன்றியமையாதது. இதுவே வீரர் மகிழ மண் நிலைக்க நமது மனம் மகிழ வழி செய்யும்.

www.tamilarangam.net



போர்க்குணம் பிறப்பெடுத்த தமிழர் வரலாற்றுப் பக்கங்களை அலங்கரிக்கும்மண்.ஈழவிடுதலைப் பாதையின் நெருப்பாறுகளுள் பல தடவைகள் நீந்தித் திரிந்த பெருமைக்குரிய மண். போர் வாழ்வுக்குள் புடம் போட்டு உயிர் நீத்த மண்ணின் மைந்தர்களைப் பெற்றுத் தந்த வீரவரலாற்று மண். கடல் அலைகளின் சங்கமிப்பில் வாழ்வுக்காக போராடும் பெரும் உழைப்பாளிகளை உருவாக்கிய வளமிக்க மண்.




மன்னார் மாவட்டம் தாயகத்தின் பழமை பெருமை களையும் பல சிறப்புமிக்க அம்சங்களையும் தனித்துவமாகக் கொண்ட ஒரு மாவட்டம். இந்தியாவின் போக்குவரத்து பாதைக்கான சிறந்த தளமாக இருக்கின்ற தலைமன்னார்; ஏராளமான கனிய வளங்களையும்; இயற்கை அழகுகளையும் தன்னகத்தே கொண்ட வளமிக்க மண். அத்துடன் திருக்கேதீஸ்வர ஆலயத்தின் பெருமை. அல்லிராணி கோட்டையின் மகிமை என அடுக்கடுக்காக அதன் பெரு மைகளை கூறிக்கொண்டே சொல்லக்கூடிய சிறப்புமிக்க மண்.



—தீபனா—

இந்த மண்ணில் பெண்களின் விடுதலையை வேண்டி நின்ற முக்கியத்துவம் வாய்ந்த பெண்கள் அமைப்புகளின் சங்கம நிகழ்வு நடைபெற்றது. பல ஆண்டுகளாக இராணுவ வன்முறையால் சிதைந்து; சீரழிந்து போயிருந்த மன்னார் மண்ணுக்கு உயிரோட்டம் கொடுக்கும் உன்னத நிகழ்வை மன்னார் மாவட்ட பெண்கள் மேம்பாட்டு நிறுவனம் கடந்த 30,31 ஆனி 1 ஆகிய நாட்களில் ஒழுங்கு செய்திருந்தது.

மன்னார்மாவட்ட நகர சபை மண்டபத்தில்அனைத்து மாவட்டங்களிலும் இருந்து வருகை தந்த நானூறுக்கும் மேற்பட்ட பெண் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். சிவப்பு, மஞ்சள் கொடிகள் வீதிகளை அலங்கரிக்க நகர சபை மண்டபமே எழுச்சிக்கோலம் பூண்டிருந்தது.

மகளிர் படையணியின் முதல்தர போர்க்கள அனுபவத்தை பெற்றுக்கொடுத்த தலைமையை உருவாக்கிய மண்ணல்லவா. போரியல் புலிப்பெண்களின் முதலாவது சண்டைக் களமாகவும் அமைந்த இடமல்லவா. பல வெற்றிகளைப் பெற்றுத் தந்து வெற்றிக்குள்ளே மறைந்துபோன சாதனைப் பெண்களின் தங்குமிடம் அல்லவா!

அப்படிப்பட்ட புலிகளின் உணர்வுகளோடு இரண்டறக் கலந்த மன்னார் மண்ணில் பெண்கள் அமைப்புக்களின் சங்கம நிகழ்வு பேராளர்களின் நெஞ்சங்களைத் தொட்டுவிட்ட பெரும் பொறியே. கலந்து கொண்டவர்களின் எண்ணங்களில்விடுதலைக்கு வலுச்சேர்த்த துடிப்பு. பெண்ணின் விடுதலையை வென் றெடுக்க வேகமாக உழைக்க அனைத்துப் பெண்களும் எழுச்சி.

முதல் நாள் நிகழ்விலே மாதர் அபிவிருத்தி ஒன்றியத் தலைவர் ஜெசி அரியரட்ணம் தலைமையின் கீழ தேசியக் கொடியேற்றல், பொதுச்சுடரேற்றல், ஈகச்சுடரேற்றல், மலர்மாலை அணிவித்தல், வரவேற்புரை, தலைமையுரை என்ற வரிசையில் நிகழ்வுகள் இடம்பெற்றன. ஈகச்சுடரினை முதல் பெண் மாவீரரான 2ஆம் லெப். மாலதியின் தந்தையார் ஏற்றி வைக்கும்போதே மன்னார் மண்ணின் மகத்துவம் புரிந்தது. தாயகப் பெண்களே! எந்தன் வழித்தடம் வழிகாட்டி செல்கின்றது. என்பின்னே அணிதிரள்வீர என அறைகூவல் விடுவது போல 2ஆம் லெப். மாலதியின் உருவப்படம் மேடையை மேலும் அலங்கரித்திருந்தது.

ஆரம்ப உரையினை மன்னார் மாவட்டமகளிர்அரசியல்துறைப் பொறுப்பாளர் நிலவரசி எடுத்து இயம்புகின்றபோது...

இந்நிகழ்வின் நோக்கம் யாதெனில், மாவட்ட மட்டத்தில் இருக்கும் பெண்களுக்கான கட்டமைப்புக்களை பலமாகவும் வலுவாகவும் அமைத்தல், அவ் அமைப்பினூடாக பெண்களுக்கான வேலைத்திட்டங்களை நகர்த்துதல், பிரச்சினைகளை இனங்கண்டு திட்டங்களை வகுத்தல். அத்துடன் கிராம ரீதியாக கட்டமைப்புகளை உருவாக்கி திட்டங்களை செயற்படுத்துதல் போன்ற செயற்பாடுகளை உருவாக்குதலே நோக்கம் எனக் கூறியிருந்தார்.

சிறப்புரையை அரசியல்துறை மகளிர் பொறுப்பாளர் தமிழினி நிகழ்த்தினார். மன்னார் மாவட்டத்தின் ஒரு பகுதி நீண்ட காலமாக இராணுவ ஆக்கிரமிப்பு கரங்களில் இருந்து வந்துள்ளது. இந்த விடுதலைப் போராட்டத்தின் ஆழமான உணர்வுகளையும், ஆழமான வரலாறுகளையும் தெரியாத சூழல் இங்கு ஏற்பட்டுள்ளது.

மேலும் அவரது உரையிலே பெண்கள் சந்திக்கும் பிரச்சினைகளை மிகவும் துல்லியமாகவும், தெளிவாகவும் இனங்காணப்படவேண்டியதேவை உள்ளது. அதன் மூலம் தீர்வுகளை இனங்கண்டு மக்களுக்கு கொண்டு செல்வது என்ற வகையில் தீர்மானங்களை எடுத்து திட்டங்களை நடைமுறைப்படுத்த முடியும். இத்துடன் இந்த மண்ணில் பிறக்கின்ற ஒவ்வொரு பெண்ணுக்கும் இயல்பாகவே ஆளுமை ஆற்றல் உள்ளது. அவ்வாறு இல்லாதுவிடின்அவர்களது வாழ்க்கைமுறை சமூகத்தின் சூழலை எதிர்கொள்வது கஸ்டமாக இருக்கும். இதனை இங்குள்ள பெண்களில் இருந்தும், போராட்டத்தில் இணைந்து சாதனை செய்து மாவீராகிப் போன பெண் போராளிகளில் இருந்தும், சக போராளிகளும் நிறுவிகாட்டியுள்ளனர்.

மூன்று நாள் அமர்வுகளிலும் பல்வேறுபட்ட தலைப்புகளின் கீழ் கருத்துரைகள் இடம்பெற்றன. சமூகத்தில் பெண்களின் ஆளுமைவிருத்தி தொடர்பாக யாழ் வலய பிரதி கல்வி பணிப்பாளர் திருமதி. மீரா அருள்நேசன், மனிதனின் உளப்பாங்கு விருத்தி தொடர்பாக சுகவாழ்வு உறுப்பினர்களான உதயமலர், தர்சினி, காந்தரூபி பெண்களின் கல்வி தொடர்பாக அரங்க செயற்பாட்டு குழு ஒருங்கிணைப்பாளர் திருமதி.பத்மினி சிதம்பரநாதன், பெண்களும் சுகாதாரமும் தொடர்பான கருத்துரையை மன்னார் மாவட்ட சுகாதார பணிப்பாளர் திருமதி றஜனி யூட், பெண்களின் வளர்ச்சியில் தொடர்பு ஊடகங்களின் பாதிப்பு தொடர்பான கருத்தமர்வினை அரசியல் துறை மகளிர் பொறுப்பாளர் தமிழினி ஆகியோர் நிகழ்த்தியிருந்தனர்.

ஒவ்வொரு கருத்தமர்வும் இடம் பெற்றபின் ஐந்து அணிகளாக பிரிக்கப்பட்டு குழுநிலை ஆய்வுகள் இடம் பெற்றன. ஒவ்வொரு குழுவினர்க்கும் ஒரு விடயம் சார்ந்த பல்வேறு தலைப்புகளின் கீழ் குழுநிலை விவாதங்கள் ஆராயப்பட்டது.

சமூகத்தில் பெண்கள் ஆளுமை விருத்தி தொடர்பாக பின்வரும் தலைப்புகளின் கீழ் குழுக்கருத்தாடல்கள் இடம் பெற்றது. பெண்களின் ஆளுமை விருத்திக்கு தடையாக உள்ள காரணங்கள், ஆளுமை விருத்தியடைய செய்யப்பட வேண்டியவை, பெண்களின் ஆளுமை விருத்திக்கு முன்னேறவேண்டிய விடயங்கள், சமூக ரீதியாக பெண்களின் ஆளுமை விருத்திக்கு என்ன செய்ய வேண்டும், ஆளுமை விருத்திக்கு உடல் ரீதியான மாற்றம் அவசியம் வேண்டும் போன்றனவே அவையாகும்

இத் தலைப்புகள் தொடர்பான அலசல்கள்மூலம் பல்வேறுபட்ட பிரச்சினைகள் முன்வைக்கப்பட்டன. பெரும்பாலான பிரச்சினைகள் பொதுப்பிரச்சினைகளாக இனங்காணப்பட்டு தெளிவான முறையில் விளக்கம் அளிக்கப்பட்டது. ஆளுமைவிருத்தி தொடர்பான குழுக் கலந்துரையாடலில் கல்வி ரீதியான பாரபட்சம் பெண்களின் ஆளுமையை குறைக்கின்றது, பால்ய விவாகங்கள், குழந்தை வளர்ப்பு முறையில் வேறுபாடுகள், பாலியல் கல்வி புறந்தள்ளப்படுதல், தகுதிக்கேற்ப வேலை வாய்ப்பின்மை, பெண்களின் சுதந்திர உணர்விற்கு தடை அளித்தல், மூடநம்பிக்கைகளையும் அறியாமைக் கருத்துக்களையும் முன்னிலைப் படுத்தல் போன்றவை குழுக்களின் மத்தியில் அமைந்த பொதுப் பிரச்சினைகளாக இனங்காணப்பட்டது.

மனிதனின் உளப்பாங்கு விருத்தி தொடர்பான கருத்துரையின் பின்பு பெண்களின் உளப்பாங்கை எவ்வாறு விருத்தி செய்யலாம் என்ற விடயத்தின் கீழ் கருத்தாடல்கள் விறுவிறுப்பாகவும் விவேகமாகவும் குழுக்கள் செயற்பட்டதை அவதானிக்க முடிந்தது.

சிறப்புக் கருத்துரைகளை முல்லை மாவட்ட அரசியல்துறை மகளிர் பொறுப்பாளர் தமிழ்நிலவு, யாழ் மாவட்ட அரசியல்துறை மகளிர் பொறுப்பாளர் கலைவிழி, கிளிநொச்சி மாவட்ட அரசியல் துறை மகளிர் பொறுப்பாளர் ஆவர்த்தனா, மன்னார் மாவட்ட பெண்கள் மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் பூவிழி, திருகோணமலை மாவட்ட அரசியல்துறை மகளிர் பொறுப்பாளர் காருண்யா. மட்டக்களப்பு மாவட்ட அரசியல்துறை மகளிர் பொறுப்பாளர் காயா, மன்னார் மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் அமிர்தாப், வவுனியா மாவட்ட அரசியல்துறை மகளிர் பொறுப்பாளர் அலை ஆகியோர் நிகழ்த்தியிருந்தனர்.

பெண்களின் கல்வி தொடர்பான குழுநிலை கருத்துப்பகிர்வின்போது கீழ் காணும் தலைப்புகளின் கீழ் கருத்து மோதல்கள் ஆரம்பிக்கப்பட்டது.

பாடசாலை செயற்பாட்டில் பெண்ணுக்கு கிடைத்த இடங்கள், கல்வியில் ஆண்,பெண் பேதம் பார்க்காமல் எவ்வாறு வளர்க்கலாம், பருவமடைந்த சடங்குமுறை கல்வி பெண்களின் ஆளுமை வளர்ச்சிக்கு எவ்வாறு தடையாக அமைகின்றது, பாடசாலை செயற்பாட்டில் பெண்கள் வளர்வதற்கு தடையாகவுள்ள காரணிகள், இன்று எமது தேவைகளை

www.tamilarangam.net



நிறைவு செய்யக்கூடிய வகையில் பெண்கள் வலுவுடைய செய்வதற்கு பாடசாலையில் எப்படிப்பட்ட கல்வி அவசியம் போன்ற விடயம் சார்ந்த கருத்துப் பகிர்வுகள் குழுக்கலந்துரையாடல்கள் ஒழுங்குபடுத்தப்பட்டிருந்தது.

மிக வேகமான இராணுவ நெருக்குவாரத்தின்கீழ் வாழும் மக்களின் நெஞ்சுக்குள் நெருப்பை பற்றவைத்த ஒரு நிகழ்வாகவும், இதுவரையில் விடுதலை வார்த்தைகளை வீசியெறிய சுதந்திரம் மறுக்கப்பட்டு உணர்வுகள் கட்டுண்ட மனங்களெல்லாம் அணை உடைத்து ஆர்ப்பரிக்கும் பெரும் வெள்ளமாக சங்கம நிகழ்வில் கலந்து கொண்டதை நினைத்து மகிழ்ந்த உள்ளங்கள் பல.

இறுதிநாள் நிகழ்வின்போது மாகாண சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் பெண்களும் சுகாதாரமும் தொடர்பான கருத்துரை வழங்கியபோது மன்னார் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் பெண்களின் சுகாதாரம் தொடர்பான அறிவு மிகமிகக் குறுகிய நிலையிலே காணப்படுகிறது. சாதாரணமாக ஏனைய மாவட்டங்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் போது இந்த மாவட்டத்திலேயே சிறுவயதுத் திருமணங்கள்அதிகமாகக் காணப்படுவதோடு திருமணத்திற்கு முன்னான பாலியல் உறவு, தந்தையால் கர்ப்பழிக்கப்பட்ட பெண்கள் ஆகிய பிரச்சினைகள் இங்கு கூடுதலாக இருப்பதை நாங்கள் செய்த ஆய்வுகள் மூலம் அறியக்கூடியதாகவுள்ளது. இப்பிரச்சினைகளுக்கான முக்கிய காரணம் போதை வஸ்து பாவனை கூடுதலாக இருப்பது மட்டுமே. வீட்டிலே தயாரிக்கப்படும் வடிசாராயம் கூடிய பாவனை கொண்டதாகவும்,நெறிமுறையற்ற திருமண உறவுகளும், பெண்களில் அதிகமானோர் போசாக்கின்மையால் பாதிக்கப்படுதல் போன்ற பிரச்சினைகளும் மையங்கொண்ட ஒரு மாவட்டமாக இது அமைகின்றது என கூறியிருந்தார்.

பெண் பேராளர்கள் மத்தியில் இருந்து கேட்கப்பட்ட கேள்விகளுக்கான பதில்கள் அழுத்தமாகவும் தெளிவாகவும் வழங்கப்பட்டிருந்தது.

பெண்களின் ஆளுமை என்ன? அவர்களுடைய ஆற்றல் என்ன? என்பவற்றை அறிய சந்தர்ப்பம் கிடைக்காததை நினைத்து கவலை அடைந்த பெண்கள்குலம் கிடைத்த வாய்ப்பை பயன்படுத்தி தம்மை வளர்த்துக் கொள்ளும் களமாகவும் அந்நிகழ்வைப் பயன்படுத்தினர்.

பெண்களின் வளர்ச்சியில் தொடர்பூடகங்களின் பாதிப்பு என்ற தலைப்புத் தொடர்பாக அரசியல்துறை மகளிர் பொறுப் பாளர் தமிழினி அவர்கள் நீண்ட தொரு விளக்கத்தை அளித்திருந்தார். தொடர்பூடகங்கள் மக்களின் மனங்களை எவ்வாறு சிதைக்கிறது, சிந்தனையை மாற்று வழியில் திசை திருப்புவதால் ஏற்படும் பாதிப்புகள், கூடிய நேரத்தை தொடர்பூடகங்கள் விழுங்குவதால் ஏற்படும் வாழ்வியல் சிக்கல் தொடர்பான கருத்து தெளிவினைக் கூறியிருந்தார். அத்தோடு மேற்கூறிய தலைப்பின்கீழ் குழுநிலை விவாதங்கள் இடம் பெற்றது.

பெண்கள் வாசிக்கும் கதைப்புத்தகங்களின் இன்றைய நிலை இதனை எவ்வாறு மாற்றவேண்டும், பெண் களை ஆபாசமாக சித்தரிக்கும் விளம்பரங்கள், சுவரொட்டிகள் போன்ற வற்றை எவ்வாறு அகற்றவேண்டும்? ரீ.வி நாடகங்கள் பெண்களுடைய நேரத்தை எப்படித் தின்னுகிறது இதை அகற்றுவதற்கான மாற்றுவழிகள் எவை? தென்னிந்தியத் திரைப்படங்கள் மக்களுடைய சிந்தனைகளை எவ்வாறு ஆக்கிரமிக்கிறது. ஆரம்பகாலந் தொட்டு இன்று வரையான பெண் சித்தரிப்புகள் எவை? அவற்றில்ஆரோக்கியமானமாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றனவா? அவை எவை? போன்ற தலைப்புகளில் குழுநிலை விவாதங்கள் இடம்பெற்று அவை தொடர்பான போதிய விளக்கங்கள் உதாரணங்கள் போன்றவை எடுத்தியம்பப்பட்டன.

ஆடல்பாடல்களுடன் அமைந்த உணர்வுகளை உரமேற்றும் எழுச்சியுடன் அமைந்த நிகழ்வினை அரங்க செயற்பாட்டுக் குழுவினர் ஒழுங்கு செய்திருந்தனர். வயது வேறுபாடு மறந்து தமது உணர்வுகளை வெளிக் கொணரும் வகையில் உரத்த குரலில் தமது உரிமைகளை இந்த உலகிற்குக் கூறினார்கள். புதியதொரு உலகைக் காணும் புதிய மலர்களின் மலர்ச்சி போல் ஒவ்வொரு பெண்ணினதும் செயற்பாடு அமையப் பெற்றது. கவலைகள், துன்பங்களை மறந்து போருக்கு வீரியம் சேர்க்கும் புரட்சிப் பெண்களாக ஆடிப்பாடி மகிழ்ந்தனர்.

அகப்பையில் தமது கனவுகளை சிதைத்திருந்த பெண்கள், ஆக்கிரமிப்பு வெறியர்களின் வேள்விக்குள் பலிக் கடாக்களாக ஆகுதியாக்கிய பெண்கள், தொலைந்துவிட்ட சுதந்திரம் மீளக் கிடைக்காதா எனக் காத்திருந்த பெண்கள் எல்லாம் ஆர்ப்பரிக்கும்அலைகளின் கற்பழிப்பில் தமது உரிமைக்குரல்களை தூதாக விடுகின்ற வரலாற்று நிகழ்வு மன்னார் மண்ணில் நிகழ்ந்தேறியது.



அனைவரது கண்களிலும்மலர்ச்சி. இழந்துவிட்ட உரிமையைப் பெற்றுவிட்ட புத்துணர்ச்சி. சந்தோசத்தில் மிதப்பு. சாதனை செய்துவிட துடிப்பு. விடுதலைக்கு வலுச் சேர்க்கஎழுச்சி. வித்தாகிச் சென்றவர்களின் விடுதலையை சுமக்க திரட்சி.

மூன்று நாட்களிலும் நடை பெற்ற கருத்தமர்வுகள் குழுநிலை விவாதங்கள் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு சில தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. இத் தீர்மானத்தை மன்னார் மாவட்ட அரசியல்துறை மகளிர் பொறுப்பாளர் நிலவரசி மிகவும் அழுத்தமாகவும் வெளியிட்டிருந்தார்.

1. மன்னார் மாவட்டத்தின் கிராமங்கள் தோறும் கருத்தரங்குகள் நடாத்தப்பட்டு பெண்களுக்கான விழிப்புணர்வை ஊட்டுதல்

2.பாடசாலைகள் தோறும் சமூக மாற்றம் தொடர்பான கருத்தரங்குகளை நடாத்தி மாணவர்களுக்கு தெளிவை ஏற்படுத்தல்.

3. மன்னார் மாவட்டத்தில் பெண்களை ஆபாசமாகச் சித்திரிக்கும் விளம்பரப்பலகைகள், சுவரொட்டிகளை தடுக்குமுகமாக பெண்கள் குழுக்களாக செயற்படுதல்.

4. மன்னார் மாவட்டத்தில் தற்காப்புக் கலைக்கழகம் ஒன்றை உருவாக்குதல்

5. கல்வியில் பெண்களின் பால்நிலை சமத்துவம் தொடர்பான மாற்றங்கள் எவ்வாறு அமையவேண்டும் என்ற ஆலோசனைகளை தமிழீழக் கல்விக் கழகத்திற்கும் மாகாணக் கல்வி அமைச்சுக்கும் அறிக்கைகள் சமர்ப்பித்தல்.

6. தங்களது பகுதிகளில் உள்ள வறுமையால் பாதிக்கப்பட்ட பெண்களின் விபரங்களைத்திரட்டி உதவி வழங்கும் நிறுவனங்கள் அமைப்புக்கள் மூலமாக அவர்களுக்கான வருமான அதிகரிப்புத் திட்டங்களை மேற்கொள்ளல்.

7. பெண்கள் அமைப்புக்கள் இணைந்து போதைப்பொருள் ஒழிப்பு தொடர்பான பரப்புரை வேலைத்திட்டங்களை முன்னெடுத்தல் போன்ற தீர்மானங்கள் இறுதியாக முன்வைக்கப்பட்டன.

இறுதியாக உணர்வுகளை மெருகேற்றும் உயிர்துடிப்பான கலை வெளிப்பாடுகள் இடம்பெற்றன. அண்மையில் வடஇலங்கை சங்கீத சபையினரால் சிறந்த கலாவித்தகர் பட்டம் பெற்ற செல்வி. உ'ா முத்துக்குமார் அவர்களின் நெறியாள்கையில் உருவான ஷபெண்ணின் பெருமை' நாட்டிய நிகழ்வும் பாம்பு நடனமும் இடம்பெற்றது. அடுத்ததாக பலமேடைகளில் ஏறி அனைவரது பாராட்டுக்களையும் பெற்ற சங்கநாத நிகழ்வு அனைவரது மனங்களையும் வென்றது என்பதே உண்மை. புரட்சிப் பாடல்களின் வரிகளுக்கு ஆத்மார்த்தமான உயிரைக் கலந்து உணர்வைவெளிக்காட்டும் சங்கநாதத்தை பிரபல நெறியாளரான பேபி ஆசிரியரின் ஒழுங்கமைப்பின்கீழ் மேடையேறியிருந்தது.

மானிடப் பெண்களின் வரலாற்றில் அந்த மூன்று நாட்களிலும் கிடைத்தற்கரிய பெரும் பேறு என்றே கூறலாம். நீண்ட காலமாக இராணுவ வெறியர்களின் மாயை வலைக்குள் அல்லற்பட்டு வாழ்வியல் துன்பத்தை அனுபவித்த நாட்களை கழித்த பெண்களே அதிகம். ஆனால் பெண்கள் அமைப்புகளின் சங்கம நிகழ்வின் பின் ஏராளமான கருத்துக்களை செவிமடுத்து தங்கள் மனங்களை ஆக்கிரமித்து வென்ற பிற்போக்குத்தனமான கருத்துக்களில் மாற்றத்தை ஏற்படுத்தப் போகிறார்கள் என்பதே உண்மை.



மன்னார் மாவட்டப் பெண்கள் அமைப்புக்களின் சங்கம நிகழ்வு அங்கு கலந்து கொண்ட ஒவ்வொரு பெண்களின் மனங்களை நிச்சயம் தாக்கும் என்பது உண்மை. அந்த தாக்க உணர்வில் இருந்து படிப்படியாக பெண்களின் முன்னேற்றம் பெண்களின் விடுதலை பெண்களின் உரிமை தொலைவில் தெரிகின்ற ஒரு மின்மினிப் பூச்சிபோல அது சொந்தம் சொந்தமாக மண்ணில் முத்தமிடத் துடிக்கிறது.

www.tamilarangam.net



அழகான நகரம் என்பது அதன் கடந்த காலம். அது இறந்த காலமாகி விட்டது. இப்போது இடிந்துபோன கட்டடங்களும், புதர் மண்டிய பாதைகளுமாக பாழடைந்து போயிருக்கிறது. ஆனாலும் அந்த நகரத்தோடு ஒன்றிப்போன நினைவுகள் மட்டும் என்றும் பசுமையாக...

பகலிலும் வௌவால்கள் ஒரு மரத்திலிருந்து மற்றைய மரத்திற்கு பறந்து தாவின. தொடர்ந்து கேட்டுக்கொண்டிருந்த வெடிச்சத்தங்கள் அவற்றைப் பயங்கொள்ள செய்திருக்கலாம். வழமையாக அந்த வெடிச்சத்தங்கள் நள்ளிரவோடு ஓய்ந்துவிடும். அன்று மட்டும் காலை விடிந்த பின்னும் நீடித்துக்கொண்டிருந்தது.

நகரத்தை அதிரச்செய்த சத்தங்கள் வந்து கொண்டிப்பது; பற்றைகளும், சிறு வடலிகளும் அடர்ந்த பிரதேசமொன்றிலிருந்து. தூரநின்று பார்க்கவே காவலரண்களும், ஆட்லறி நிலைகளும் தெரிந்தன. அவற்றைத் தாக்கியழிப்பதற்காக அவர்கள் வேகமாகச் செயற்பட்டுக் கொண்டிருந்தார்கள். சமவிகிதத்தில் பெண்போராளிகளோடு ஆண்போராளிகளும். வேகத்திலும், செய்திறனிலும் அப்படியே.

அந்தக் காவலரண்களும், ஆட்லறி நிலைகளும் மாதிரி அமைப்பு என்ற நினைப்பு இல்லாது, உண்மையாக சண்டை செய்யும் ஓர்மமோடு பயிற்சி செய்துகொண்டிருந்தார்கள். சில இடங்களில் நெருப்பு எரிந்து கொண்டிருந்தது. போராளிகள் ஆங்காங்கே வைக்கப்பட்டிருந்த இலக்குகளுக்கு சுட்டுக்கொண்டிருந்தார்கள். பல ரவைக்கூடுகளைக் காலியாக்கிவிட்ட துப்பாக்கிகளின் குழாய்கள் சிவந்து போயிருந்தன. வியர்வையிலூறிய உடுப்புகளோடும், பற்றைகள் கீறிய இரத்தக்கசிவுகளோடும் ஓயாது அவர்கள் செயற்பட்டுக் கொண்டிருந்தார்கள்.

அவர்களில் ஒருத்தியாக அவள். (இப்போதும்; நாங்கள் வாய்திறந்து பெயர் சொல்லும் நாள்வரையும்இப்படியே எழுத முடியும்.) அங்கே பயிற்சியிலீடுபட்டுக் கொண்டிருக்கும் அணியிலொன்றுக்கு பொறுப்பாய் நின்றவள். அவளது சூடுகளின் வேகம் இலக்கை சின்னாபின்னமாக்கியது.

தூரநின்று அவளைக் கவனித்தார் பயிற்சி வழங்கிக்கொண்டிருந்த பொறுப்பாளர். அவள் எடுத்திருக்கும் நிலை, துப்பாக்கி பற்றியிருக்கும் விதம், இலக்கை குறி பார்த்து சுடுகின்ற நேர்த்தி இப்படி ஒவ்வொன்றாகப் பார்த்தவர் அவளது கையைப் பார்க்கிறார்... கண்ணில் முள் குற்றியதுபோல உறுத்தியது.

அதற்காகத்தான் பயிற்சி எடுக்கவேண்டாம் என்று திரும்பத் திரும்ப வலியுறுத்தினது. அவள் கேட்கவேயில்லை.

அவளிற்கு அருகில் சென்றார். அவள் சுட்டுக்கொண்டேயிருந்தாள். சுற்றிவரவும் சூட்டுச் சத்தங்கள். கட்டளையிடும் குரல்கள். ஷஷநீங்கள் சுட வேண்டாம்... எழும்புங்கோ...'' அவள் சுடுவதை நிறுத்துவதையோ, பயிற்சி இடைநிறுத்தப்படுவதையோ விரும்பவில்லையென்று பார்வை உணர்த்தியது.

இத்தோடு எத்தனையாவது தடவை. அவளின் பயிற்சியை நிறுத்தச்சொல்லி விட்டார்கள். அவள் தனது இலக்கில் கொண்ட இலட்சியத்தில் உறுதியாகவே இருந் தாள்.



அவளின் உறுதி அவளைச் சுற்றியிருந்த யாருக்குத்தான் தெரியாது.

ஆனையிறவுத் தளத்தினுள் இலக்கை உறுதிப் படுத்துவதற்கான இறுதி நாள் வேவு. அதில் அவளும் ஒருத்தி. முன்னணி நிலைகளை நெருங்குவதே பெரிய சிரமம். அவ்வளவு தூரம் விழிப்போடு இருக்கும் காவலரண்கள்.

# விடியலுக்கா...

விழிகளிற்குள் பயத்தை நிரப்பி மூடாமலே இருக்கும் காவலரண்களிற்கும், சும்மா சும்மா சுட்டு பற்றைகளையும், அழகிய இரவின் அமைதியையும் சேதப்படுத்தும் துப்பாக்கி ரவைகளிற்கும் சிக்காது உள்நுழைதல் என்பது சாதனைதான். அதற்காகப் பல தடவை பல அணிகள் முயன்று விட்டன. சில சாதனையோடு உள்நுழையும். சிலது வேதனையோடு வெளியே வரும். இந்த அணி சாதனையோடும், வேதனையோடும் உள்ளே நுழைந்தது. சாதனையாக முன்னணி நிலை கடக்கும்போது வேதனையாகத் தாக்குதலுக்கு முகம் கொடுக்கவேண்டியிருந்தது.

சிலரை இழந்து, சிலரை விழுப்புண்களோடு திருப்பி அனுப்பி உள்ளே நுழைந்து பார்த்தபோது; ஆக மூன்று பேர்தான். அதில் இவளும் ஒருத்தி.

கையிலிருந்து இரத்தம் வழிந்து கொண்டிருந்தது. எலும்பை உடைத்து ரவை பாய்ந்திருந்தமையால் வலியும் கடுமையானதாகவே இருந்தது. சுற்றி கட்ட சிறுதுணி மட்டுமே இருந்த களச்சூழலில; அந்தப் பணி முடியும்வரை தங்கி நின்றாள் என்பது அவளது வலிமைக்கு மட்டுமே சாத்தியமான விடயம்.

கை வலிக் கின்றதேயென்று வாய்திறந்து அழக்கூட முடியாத அவலம்.

நாளாக நாளாக புண் நாற்றமெடுக்கத் தொடங்கியது. அதிலிருந்து வழியும் ஊனத்தையும், நாற்றத்தையும் தாங்கிக் கொள்ள முடியாததாய் இருந்தது. காயம் அழுகிய நிலையை அடைந்தது. இலையான்களின் தொந்தரவும் அதிகரித்தது.

அவள் தனித்து உலாவினாள். கூட வந்தவர்களோடு சேர்ந்து உண்ணவோ, தண்ணீர் பருகவோ, ஓய்வாக இருக்கவோகூட முடியாது. அவ்வளவு நாற்றம். தனக்குள்ளே எத்தனை வேதனைகள் இருந்தாலும் தாங்கிக்கொண்டு பணியை முடிக்கும் வலிமை இருந்தது.

வேவுப்பணி முடித்து வெளியே வந்தபோது மருத்துவமனையில் வேதனையான செய்தி. எலும்பை முறித்தும் நரம்புகளைப் பாதித்தும் ரவை பாய்ந்திருக்கிறது. மணிக்கட்டுக்குக்கீழே இயங்க மறுக்கும் விரல்களில் இனி உணர்வு

**துளசிச்செல்வன்**

வருவது கஸ்டம். அவள் அழவில்லை. ஆர்ப்பாட்டம் செய்யவில்லை. குமுறப்போகும் எரிமலை ஒன்றின் மௌனம் காத்தாள்.

மருத்துவமனையில்தான் அடுத்த தாக்குதலுக்கான பயிற்சி ஆரம்பமாகப்போகும் செய்தியறிந்தாள். மறுநாள் பயிற்சிமுகாமில் அவள்குரல் கேட்டது. பயிற்சி எடுத்து அடுத்த தாக்குதலுக்குச் செல்ல வாதாடிக் கொண்டிருந்தாள்.

காயம் ஆறாத கையும், உணர்வற்ற விரல்களும் எப்படித் துப்பாக்கியைப் பற்றும்? எப்படி வேகமாக நிலையெடுத்து நகர உதவும்? என்பது பயிற்சிப் பொறுப்பாளர்களின் கருத்து. ஷஷநான் செய்வன். என்னட்டை செய்வன் என்ற நம்பிக்கையும், செய்யக்கூடிய வலிமையும் இருக்குது'' என்பது அவளது உறுதியான வாதம்.

பயிற்சி அணியோடு இணைக்கப்பட்டாள். ஒரு அணியின் பொறுப்பாளர். அந்த அணியே தாக்குதல் திட்டத்தில் முக்கிய பகுதியை அழிக்கப்போகும் அணி.

ஓர் கையால் துப்பாக்கியை இயக்குவது முடியாத காரியம். ஆரம்பத்தில் பெரிதும் சிரமப்பட்டாள். யாருடைய அனுதாபத்திற்காகவும் காத்திராமல் தானே தனது அனைத்துப் பணியையும் பயிற்சியிலும், பயிற்சி ஓய்வின்போதும் செய்தாள்.

கடைசி நாள் பயிற்சி... நேற்று மாலையில்தான் ஆரம்பித்தது. நெருப்பைக் கடந்து நகரவேண்டிய பயிற்சி. தனது அணியை அழைத்துக்கொண்டு நகர ஆரம்பித்தாள். துப்பாக்கியில் பிடித்திருந்த கை நழுவி எரிந்து கொண்டிருந்த நெருப்பில் விழுந்து விட்டது. உணர்வற்ற விரல்களால் தசைகள் பொசுங்குவதை உணர முடியவில்லை.

எரிந்து கொண்டிருந்த பிளாஸ்டிக் அவளது கைகளில் ஒட்டிக்கொண்டது. விரல்களில் நெருப்பு. அருகில் நின்றவர்கள் அவளிற்குச் சொன்னபின்னர்தான் அவளால் உணர முடிந்தது. அதற்குப் பின்னர்தான் நெருப்பை அணைத்தாள். அவளிற்கு வலியோ, வேதனையோ இல்லை. அந்த விரல்கள்தானே உணர்வற்றவை.

(15.ஆம் பக்கம் பார்க்க)

www.tamilarangam.net



இரவுப் பணிற்சிகளில் இருந்து இடைநிறுத்துவதாக பயிற்சிப் பொறுப்பாளா் உத்தரவிட்டார். அவள் ஏற்றுக்கொள்ளவில்லை. நியாயமான காரணங்களைச் சொல்லி மறுபடியும் தன்னைப் பயிற்சியில் சேர்த்துக் கொள்ளும்படி கேட்டாள். அவளது உறுதிக்கும், விடுதலை உணா்விற்கும் மதிப்புக் கொடுத்து மறுபடியும் சோ்த்துக் கொள்ளப்பட்டாள். அவள்தான் தொடா்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கும் பயிற்சியில் நாயகியாக திகழ்ந்து கொண்டிருக்கிறாள்.

பயிற்சி ஆசிரியா் குனிந்து அவளது துப்பாக்கியை வாங்கினாா். அப்போதுதான் அவளிற்கு என்ன நடந்துவிட்டது என்பத தெரிந்தது. கைகளைப் பின்னால் ஒளித்தாள். உணா்வள்ள விரல்களால் மற்றைய கையைத் தொட்டுப்பாா்த்தாள். அவளிற்கு எல்லாமே புரிந்து விட்டது.

பயிற்சி ஆசிரியரை உறுத்திய விடயம் தொடா்ந்து சுட்டுக் கொண்டிருந்தவளின் கைகள் துப்பாக்கியின் அதிா்வால் கைபிடியிலிருந்து நழுவி குழல் பகுதியிலிருந்தது. சிவந்து போயிருக்கும் குழல் எப்படி அந்த உணா்வற்ற கைகளின் தசைகளைத் தின்றிருக்கும்.

ஷஷகையைக் காட்டுங்கோ...''

ஷஷஇல்லை...

எனக்கொன்டுமில்லை...''

அவளது துப்பாக்கியைப் பாா்த்தாா். குழல் பகுதியில் ஏதோ ஒட்டியிருப்பது தெரிந்து உற்றுப் பாா்த்தாா். அது அவளது கையிலிருந்து உரிந்து ஒட்டியிருக்கும் தசைகள்...

அவள் மறைத்த கையில் தசை உரிந்த இடத்திலிருந்து இரத்தம் கசிந்து கொண்டிருந்தது. அந்த இடம் புண்ணாய் இருந்தது.

அவள் பயிற்சி ஆசிரியரைப் பாா்க்கிறாள். ஷஷதயவு செய்து என்னை நிறுத்த வேண்டாம்'' என்று கெஞ்சும் பாா்வை... அவளைப் பொறுத்தவரை இலக்கு மட்டும் உண்மையானது. அதை அடைய வேண்டுமென்ற வலி மட்டும் நிரந்தரமானது. தாங்க முடியாது. ஏனைய வலிகள் எல்லாம் உறுதியில், கால நகா்வில் கரைந்து போகக்கூடியவையே. நம்பிக்கையான பெண்ணாய் செய்து காட்டினாள். காலம் ஒருநாள் அவள் யாா்? என்ற வினாவிற்கு விடையளிக்கும்.

www.tamilarangam.net






கப்டன் வானதி வெளியீட்டகத்தினால் நடாத்தப்பட்ட இலக்கியப் போட்டி 2002 இல் முதல் பரிசு பெற்ற சிறுகதை.

# வீட்டு விடுத

வீட்டு விடுத

திடீரென்று சீறிக் கொட்டிய மழையில் கமகமவென்று மண்வாசனை பொங்கிச் சுழன்று சட்டென்று அமுங்கிப்போனது. அப்படித்தான் அவள் மனதும் இருந்தது. சொல்லித் தெரிய வேண்டியதில்லை. இந்த மழையும், சிலீரிடும் குளிரும் ஆசையாய்த்தானிருந்தன. தேவையில்லை... அப்பா இருந்தால் அழகுதான். இரவும், மழையும் அப்பா இருக்கும் போதுதான் அழகாய் இருக்கும். இல்லா விட்டால் பயந்தான்... போதாத குறைக்கு அண்ணாகூட எங்கேயோ போய்விட்டா அவன் வருவதானால் இ மழைவிட்டபிறகுதான் வருவான். பிறகெப்படி மழையை ரசிப்பது...?

அண்ணா சொல்வது உண்டு... ஷஷகுடிச்சுக் குடிச்சே எங்களைச் சீரழிச்ச அப்பன் ' மேலை உனக்கேன் அத்தனை அக்கறை...''

அவளறிந்தவரை அப்பாவின் சிகரெட் வாச அவளுக்குப் பிடிக்கும். இந்த மழைக்குள் எங்கே சிகரெட் மணப்பதாய் உணர்வு. அப்பா அருகிலிருப்பர்போல்... ஷஷவிருப்பமில்லாமத் தாை எங்களைக் கலைச்சவர்''

தங்கையின் தவிப்பு... ஷஷஅந்த மனிசன் இந்த வீட்டுக்குள்ள வந்தால் என்னைத் தலைமுழுக வேண்டியதுதான்''

அண்ணாவின் கொதிப்பு...

இவளிடம் மட்டும் எந்த சலனமும் இல்லாத உணர்வு இருப்பது புதினம்...

சின்னவயதில் அப்பாவிடம் கோபித்துக்கொண்டு அம்மா பிறந்த வீடு வரும் போதெல்லாம் சின்னக்குஞ்சுகளாய், விபரம் புரியாத வயதில், அண்ணாவோடும், தங்கையோடும், அவளும் சேர்ந்து கத்தியதுண்டு. ஷஷஅப்பா வீட்டை போவம்...''

அம்மா அடிப்பாள்... இழுத்துக் கொண்டு வருவாள். ஐந்தாறு நாளில் இவர்களின் ஆய்க்கினை தாளாது திரும்பவும் கூட்டிப்போவாள். சின்ன வயதுகளில் இதுதான் நடந்தது. நடந்து கொண்டிருந்தவைகளின் அர்த்தமே புரியாத வயது அது. உழைத்து வந்த காசினைத் தன் பிறந்த வீட்டிற்காகச் செலவளிப்பதும், அம்மாவின் பணத்தை அப்பா குடித்துக் குடித்தே சீரழிப்பதையும் அறியமுடியாத நாள்கள் அவை. அப்போதெல்லாம் ஷஊர் மரியாதைக்காய்த் ' தான் உன்னைக் கட்டிக் ' கொண்டன். ஊரிலை எனக்கு வேறை பொம்பிளை இல்லையோ!'' என்று அப்பா கத்துவதெல்லாம் வெறும் அர்த்தமற்ற சொல்லாய்த்தான் இவர்கள் புரிந்து கொண்டார்கள். ஆனால் கொஞ்சம் வளர்ந்து, இரண்டும் கெட்டான் வயசில் கொஞ்சம் கொஞ்சமாய் விளங்கத் தொடங்கியபோது, அம்மாவின் நியாயம் புரிந்தபோது, அண்ணா தலையெடுத்தபோது... எல்லாம் மாறிப் போயிற்று.

ஷஷஇனி இந வீட்டிலை ஒரு நிமிசம் கூட நிக்கக்கூடாது...''

அண்ணா அவர்களை அழைத்தான்.

இறுதியான அந்தப் பிரிவு அதுதான். ஆனால் அவளுக்கு அப்பாவில் விருப்பம். அப்பாவின் சிகரெட் வாசம் மூக்கை நிறைத்தது...

எவ்வளவுதான் கோபம் இருந்தாலும், அப்பாவுக்கு அவள் மகள்தானே. முள்ளாய்க் குத்துகிற தாடியை ஆசையோடு தடவிய நாள்கள் எல்லாம் நெஞ்சில் பசுமையாய்த்தானிருந்தன. அப்பா என்ற உணர்வே தவிர அவள் அம்மாவை நினைக்கும்போது அப்பாவை வெறும் குரூபியாக உணர்வற்ற மிருகமாகத்தான் பார்க்க முடிந்தது. அம்மா அதிகம் பேசினதில்லை அவளறிந்தவரை. ஆனால் இவர்களுக்காக அம்மா அப்பாவிடம் சண்டை போட்டபோது அப்பாவின் குடியும், பொறுப்பற்ற தனமும் விளங்குகிற வயசானபோது, அம்மா உழைத்து வந்த காசை எல்லாம் பிடுங்கி நண்பர்களுக்கும் தனக்கும் குடியாய் ஊத்திக் கும்மாளமிடும்போதும்... அப்பா... அப்படியொரு உறவே இல்லாமலிருந் திருக்கக்கூடாதோ என்று தோன்றும். அன்று ஷஷநீ மட்டுமே இஞ்சை பொம்பிளை ஊர் முழுக்க எனக்கு பொம்பிளை இருக்கு...''

அப்பா குடி வெறியில் கத்தியபோது

அந்த வீட்டை விட்டே அவர்கள் வெளியேறியபோது...

ஷஷஉனக்கு என்ரை சல்லிக்காசு கூடக் கிடைக்காது போ...'' அப்பா ஆசிர்வதிக்க,

அவள் திரும்பி நின்று கத்தினாள்...

ஷஷஉங்கடை சல்லிக்காசுக்காக நாங்களொண்டும் பிச்சை கேக்கலையப்பா அம்மாடை உழைப்பையெல்லாம் குடிச்சுக்கரியாக்கின உங்கடை சல்லிக்காசு எங்களுக்கு வேண்டாமப்பா...''

அம்மாவும், தங்கையும் ஒன்றும் பேசவில்லை. ஏன் அண்ணாகூடப் பேசவில்லை. என்றுமே அப்பாமீது ஆத்திரம் கொண்டிருந்த அவர்களே பேசாதிருந்தபோது, அப்பாவில் பிரியம் கொண்ட அவளா அப்படிக் கத்தினாள்.

அவளுக்கே ஆச்சரியமாய்த்தானிருந்தது. ஒழுகியிருந்த வீட்டுக்குள் ஈரம் மெள்ளப் பரவ ஆரம்பித்தது. இன்னும் சற்று நேரத்திற்கெல்லாம் மழை பெய்தால் இரவு படுக்கவே முடியாது வானத்தைப் பார்த்தாள். சிலுசிலுவென்று மரங்களிலிருந்து சிலுநீர் சொட்டியது. விடியும்போது துணைக்காய் கூவிய பெண்குயிலொன்று வேப்பந் ' துளிகளிற்கிடையே ஒதுங்கி அந்தரித்தபடியிருந்தது.

அம்மா... அம்மாஇல்லை... ஏக்கமாய்த் தொண்டையில் துக்கம் கப்பியது. இந்த அம்மா, அப்பாவைக்கட்டி என்னத்தைக் கண்டாள். அம்மா தானே தேடியவினைதானே. வீட்டில் மறுத்தும்கூட, தன்னோடு வேலைசெய்த அப்பாவைத்தான் கலியாணம் கட்டுவேன் என்று அடம் பிடித்து மணம் செய்தும் பின்னர் என்ன கண்டாள்? தன் சம்பளத்தை தாரைவார்த்துக் குடிக்கக் கொடுத்து பின்னர் பொறுக்க முடியாமல் பிரிந்து போய்...?

அம்மா கெட்டிக்காரிதான். தனியே பிரிந்து போனாலும் தன் உழைப்பால் பிள்ளைகளை வளர்த்து ஆளாக்கி நல்ல நிலையில் உருவாக்கி விட்டிருக்கிறாள்.

அண்ணா சொல்லுவான்

ஷஷநான் ஷஷலோயரா'த் ' தான் வருவன் ஏன் தெரியுமோ! எனக்கப்பன் எண்டு ஒருதன் இருக்கிறானே அவனை நடுத்தெருவிலை நிற்பாட்டுறதுக்கு...'

ஷஷஅப்படி இல்லை அண்ணா அவரிட்டை சல்லிக்காசுக்கு வரமாட்டம் எண்டாச்சு. இனியென்ன? காசுக்கு பறக்கிற மாதிரி



→

www.tamilarangam.net



அவரிலை வழக்குப் போடுறது... கேடுகெட்ட காசு போகட்டும் போ...''

அவள் அலுத்துக் கொள்ளும்போது தங்கை குதிப்பாள்...

''செய்யிறதையும் செய்துபோட்டு அந்த மனிசன் தன்ரை புகழ் பாடித்திரிய நாங்கள் இஞ்சை தேங்காயும், மாங்காயும் கொண்டு சந்தைக்கு அலையுறதோ...''

ஏலாமையின் தாக்கத்தில் அழுகை வெடிக்கும். அவள் உயிர் துடிக்கும். உணர்ந்ததுதான்... பள்ளி நாட்களில் பிள்ளைகள் பகிடி பண்ணியிருக்கிறார்கள். ரகசியமாய் நக்கலடித்திருக்கிறார்கள். தாங்கமுடியாத வேளைகளில் தவிப்பு ஏற்படும்.

அப்பா... இல்லாமலே இருந்திருக்கலாமே... சின்னக் கோபம் வரும். பள்ளிக்கூடம் போகவே மனம் வராது.

அண்ணா குமுறுவான்.

''அவன் கேட்டவன். நான் வந்து பல்லைக் கழட்டுறன்''

அம்மா குறுக்கிடுவாள்.

''நிப்பாட்டடா நீயும் உன்ரை அப்பன் மாதிரி இல்லாட்டி அதுவே காணும்'' அம்மாவின் கண்களில் ஈரம் சொட்டி நிற்கும். விதியை விரட்டிய களைப்புத் தெரியும். உள்ளே நிரந்தரமாய் சோகம்...

இவர்கள் வரையில் அம்மா நிரம்பக் கண்டிப்பானவள். எதுவும் அம்மாவின் அனுமதியின்றி அங்கு நடந்ததில்லை. ஆனால் சிலவேளைகளில் அம்மாவின் கண்டிப்பு அதிகமோ என்று தோன்றும். ஆனால் எதுவும் கேட்டதில்லை. தான் அடிபட்டதுபோல பிள்ளைகளும் வாழ்க்கையை இழந்துவிடக்கூடாது என்று அம்மா நினைத்திருக்கலாம். அம்மாவின் வரையில் அது சரிதான். ஆனால் அவளோ, அண்ணா தங்கையோ சின்னனிலேயே உலகம் அறிந்துவிட்டவர்கள். இனியா தவறு செய்வார்கள்.

முன்னொரு நிகழ்ச்சி... பிரிந்துபோன அப்பா ஒருநாள் பொட்டலங்களோடு வந்தார். அண்ணா இல்லாத நேரம்... கொண்டு வந்த இனிப்புகளை வாயில் ஊட்டிவிட்டார். ஆடைகளை விரித்துப்போட்டு அழகு பார்த்தார். அம்மா அறையிலிருந்து எட்டிப்பாத்தவள்தான் சட்டென்று உள்ளே மறைந்தாள். பின் திரும்பவே இல்லை. தங்கை தயங்கியபடியே நின்றாள். சிகரெட் வாசம் அவளுக்கு பிடித்தது. தாடி 'சுருசுரு' வென்று குத்தியதாய் உணர்வு. சட்டென்று வாய்க்குள் இனிப்புக் கசந்தது. பழைய நினைவுகள் உள்ளே சுழன்றன. வாசலுக்கு வந்து காறித்துப்பினாள். உடுப்புகளைக் கழற்றி வீசியெறிந்தாள்.

''உங்கடை சல்லிக்காசு கேளாதவளுக்கு ஏன் சட்டை வாங்கி வந்தனிங்கள்...''

''அஞ்சு வயசில வாங்கித் தராத இனிப்பையெல்லாம் பதினைஞ்சு வயசில உங்களை யாரு வாங்கித் தரச்சொன்னா?''

முகத்தில் அடித்த அடியாய் அப்பாவின்முகம் சுண்டிப் போயிற்று.

''இன்னும் ரெண்டு வருசத்தாலை நீ என்னோடை வந்திடு கண்ணா...''

கொஞ்சினார்.

''ஏன் இன்னும் ரெண்டு வருசத்தாலை நீங்கள் படுத்த படுக்கையாய்க் கிடக்க உங்களுக்கு பணிவிடை செய்யவோ? உங்களுக்குத்தானை ஊர்முழுக்க பொம்பிளையள் இருக்கினை. போய்க் கேக்கவேண்டியதுதானை...''

உள்ளேயிருந்து தனல் கட்டியாய் வார்த்தைகள் பொங்கிச் சிதறும். அப்பாவின் தலை குனியும். அம்மா மௌனமாய் இருப்பாள். அதை அவள் ஆதரிக்கின்றாளோ, கல்லானாலும் கணவன் என்று அப்பாவையே இன்றும் ஆதரிக்கின்றாளோ எதுவும் தெரியாது. ஆனால், இப்போது நினைத்துப் பார்த்தால் அம்மா மறக்க முயன்றிருக்கிறாள் என்று தெரியும்.

அப்பா கதைக்கமுயலும் நேரமெல்லாம் அம்மா அவருக்கு முகம் கொடுத்ததில்லை. ஒரே ஒருமுறைதான் தவறு செய்தாள் அம்மா. இனி எதற்காகவும், அந்தத் தவறு செய்ய அம்மா விரும்பவில்லை. மீண்டும் ஒருதடவை தன்னை அடிமைப்படுத்த அம்மா விரும்பவில்லை.

ஆனால், காலம் அவள் அப்பாவை மீண்டும் அவள் வீட்டுக்கு அழைத்து வந்தது. இரவுகளில் கூவிவரும் 'செல்'லொன்று அவள் அப்பாவையும் தாக்கிவிட்டது. அவளது இரத்தம் துடித்தது. அண்ணாவும் தங்கையும் முணுமுணுத்துக்கொள்ள, அப்பாவைக்கூட்டி வந்து வீட்டில் வைத்துப் பராமரித்தாள். அம்மாவில் மாற்றமில்லை என்றாலும் அவருக்கான கடமைகளினின்றும் தவறிவிடவில்லை. அனைத்தையும் தயாராக்கி அவளைச் சொல்லிச் செய்வித்தாள். மறந்தும்கூட அந்த உறவைப் புதுப்பிக்க அம்மா விரும்பவில்லை. இவ்வளவு காலம் தாங்கிய துயரம் இனி வைராக்கியத்திலேயே கழிந்துவிடும். இனி ஒரு இளகல், இந்த இதயத்துக்கு

## தாட்சாயணி

தேவையில்லை. ஆனால் பிள்ளைகளுக்கு அவள் தடையிடவில்லை. தன் கடமைகளைச் சரிவரச் செய்தாளே தவிர உணர்ச்சி முழுவதையும் அழுந்தத் துடைத்திருந்தாள்.

அவளோ அப்பாவின் மகள்...அம்மாவின் வாரிசு. ெ‘ல் துண்டு எடுத்து பூரணமாய் குணப்படும்வரை அருகிலேயிருந்தாள். பத்திரிகை படித்து, உணவூட்டி ஒரு குழந்தையைப்போல அவரைப் பராமரித்தாள். உறங்கும்வேளையில் ஒரு குழந்தையைப்போல சலனமற்றிருக்கும் அந்த முகத்தை உற்றுப் பார்ப்பாள். ஓ... அப்பா உங்கள் சின்னக் கண்ணா நிக்கிறேன் தெரியுதாப்பா...

பாசம் கரைந்து பெருகி வெள்ளமாய் ஓடும்... அதற்குள் அப்பாவின் தவறுகள், அறியாமைகள், ஆணவங்கள் அடித்துச் செல்லும், சில நிமிடங்களுக்கு...

மீண்டும்... அப்பா எழும்போது உணர்ச்சியற்ற கல்லாய் மனது இறுகியிருக்கும். அந்த வைராக்கியம் வெல்லும்... பணிவிடை மட்டும் தடங்கலின்றியே... அப்பா சிலவேளைகளில் அன்பாய், ஆதரவாய்த் தெரிவார். ஆனால் போதையேறினாலோ ஆளையே தெரியாது. எங்கேனும் வெறித்தபடியிருக்கும் அம்மாவைப் பார்க்க பாவமாயிருக்கும்.

இப்போ, அம்மா போயாகிவிட்டது.

அம்மா... இறுதிவரை தன்னிலேயே உறுதியாய் நின்று வென்று விட்டாள். அண்ணா கையால் கொள்ளி வாங்கி விழிகளை மூடிக் கொண்டாள். அந்த நேரம் அப்பா எங்கோ ஓர் கூட்டத்தில் குடிவெறியோடு அலைந்து கொண்டிருந்ததை எதிர்வீட்டு ஆச்சி சொன்னபோது, அவளுக்கேற்பட்டது... துக்கமா? கோபமா? ஏக்கமா? எதுவுமே தெரியவில்லை. கல்லாய் இறுகியது மனம்.

பின்னர், இடையிட்ட நாட்களில் அப்பா வருவார். அண்ணாவும் தங்கையும் முணுமுணுப்பார்கள். அவளுக்குச் சிரிப்பு வரும். அப்பா மேல் பரிதாபமாயிருக்கும். அப்பா என்ன வினோதப்பிறவி. ஆண்களென்றால் அப்படித்தானா? இல்லையே... அண்ணா அப்படியில்லையே... பழகிய சூழலா அப்பாவை அப்படி மாற்றியது? அம்மா... பாவம் பெண் சுதந்திரம் என்று விரும்பியவரைக்கட்டி என்ன சுகம் கண்டாள்?

சுதந்திரம் என்பது சுயகட்டுப்பாடு. இது ஆணுக்கும் பெண்ணுக்கும் தேவையான ஒன்று. இது அப்பாவுக்குத்தான் அதிகம் தேவைப்படுகின்றது. தன்னைக் கட்டுப்படுத்த மறந்து, உணர்ச்சிகளுக்கு அடிமையாகி, குடி போதையிலேயே மிதப்பவருக்கு இனி மீட்சி ஏது? அடிமைநிலை பெண்களுக்கு மட்டுமில்லையே. குடிக்கு அடிமையாகிய அப்பா, அம்மாவை அடிமைப்படுத்த நினைத்தார். அம்மா மீண்டு விட்டாள். அந்த அடிமைத் தளையிலிருந்து மீறி விட்டாள். அவர்களையும் காப்பாற்றி விட்டாள். அப்பா... மீள முடியாத குடியிடம் அடிமைப்பட்டுவிட்டார். பாவம்... அளவு மீறிய பாசம் வைத்திருந்தும் அதை வெளிக்காட்ட முடியாமல் தவித்து... தொண்டை அடைக்கிறது...

மழை விட்டு விட்டது, வானம் வெளிர்கிறது. மரங்கள் தம் இலைச் சிறகுகளைச் சிலிர்த்து உதறிக் கொள்கின்றன.

சுதந்திரமின்றி அடிமைப்பட்ட விமானமொன்று வானத்தில் இலக்குத்தேடி அலைந்தபடியிருந்தது. கட்டுப்பாடு கொண்டதொரு போராளிக்கூட்டம் பலாலித்தளம் நோக்கி விரைந்து கொண்டிருந்தது. தூரத்தே குயில் இன்னும் இணையைத் தேடிப் பாடியது.

எங்கோ சிகரெட் வாசம் மணப்பதாய்த் தோன்றியது. அப்பாவின் ஞாபகம்... அப்பா இருந்தால் எப்போதும் நல்லதுதான். கோபம்தான்... உறங்கும்போது அந்த அழகு பார்த்து ரசித்து அன்பு கொட்டி... திரும்ப, உறங்கியெழும் நேரம் கோபம் காட்டி... உங்கள் உதவாக்கரைத் தனத்தை இன்னும் மறக்கவில்லையென்று சொல்லி... என்றாலும் அப்பா மேல் அவளுக்கு எவ்வளவு விருப்பம்...

அம்மா இருந்தால் நிச்சயம் சரியென்பாள். அப்பாவிடமிருந்து ஆதாயமெதுவும் வேண்டாம். அன்று சொன்னதுபோல்தான் இன்றும் ''அப்பாவிடமிருந்து சல்லிக்காசு கூடத் தேவையில்லை'' ஆனால் அவள் அப்பா... அதனால்தான்...

அப்பா வந்து எவ்வளவு நாளாயிற்று. அப்பா இனி எப்போது வருவார்? அடுத்தமுறை நெஞ்சுவலி வரும் போதா?...

வேதனையான ஒரு வெற்றுச் சிரிப்பு அவள் உதட்டில் நெளிந்து மறைந்தது.

www.tamilarangam.net



# சுமைகளைத் சு

படுவான் கரையில் இரத்தம் சிந்தியபடி மறைந்து கொண்டிருந்த சூரியனை ரசிப்பதில் தமிழிற்கு தனி விருப்பம். இன்றும் அப்படித்தான், கடலில் இறக்கி விடப்பட்ட படகின் அணியப் பகுதியில் இருந்தபடி கண்ணிற்கு முன்னே அஸ்தமனமாகும் கதிரவனின் அழகில் அவள் கட்டுண்டு போனாள்.
சின்ன வயதிலேயே மேயவிட்ட ஆடு மாடுகளை சாய்க்கச் செல்லும் அண்ணாவிற்கு பின்னால் வால் பிடித்துக்கொண்டு ஓடும்போது, அம்மம்மா அண்ணாவைத்தான் பேசுவா,
ஷசெக்கலுக்கை பொம்பிளைப் பிள்ளையளை கூட்டிக்கொண்டு போகாதையடா...'
ஷநீ கிடவணை பழைய பஞ்சாங்கம்...' என்று அம்மம்மாவிற்கு காதில விழாம சொல்லிப்போட்டு
ஷஅதெண... நான் கூட்டிண்டு போகேல்ல...' என்று உரக்கச் சொல்லிவிட்டு, ஷடி தங்கச்சி நான் முன்னால போறன், நீ பின் பொட்டுக்கிளால பூந்து ஓடி வா...' என்று அந்த வயதிலயே, எனக்கு, என்ரை உணர்வுகளை மதிக்கிற அண்ணா மேலை தனி விருப்பம்.

அந்த மாலைப்பொழுது, வீடு திரும்பும் மனிதர்கள், கூடு திரும்பும் பறவைகள், தம் இருப்பிடம் தேடி வரும் விலங்குகள், இந் நேரம் படகோடு கடலுக்குள் இறங்கும் மீனவர்கள், அந்தக் கடலுக்குள் விழுந்து கொண்டிருக்கும் சூரியன் எல்லாமே எனக்குப் பிடித்தது. அதால, அண்ணாவும் என்னோட மினக்கெடுவார்.

இப்ப அண்ணா எப்பிடியிருப்பார். எங்கையிருப்பார். ஏன், இருக்கிறாரோ இல்லையோ எதுவுமே தொயாது. எங்கை போய் யாரிட்டைக் கேட்டாலும் மௌனம்தான் பதிலாக வந்து கொண்டிருந்தது.

எனக்கு அந்த நாளை என்றைக்குமே மறக்க ஏலாது. அந்த நாளிற்கான முதல் இரவு, மக்கள் மத்தியில் பீதியும், பதற்றமும் நிறைந்த நேரங்களாக நகர்ந்து கொண்டிருக்க இந்த பதற்றத்திலும் இறுக்கத்திலும் யாரோ ஒருவர் பி.பி.சி செய்தி கேட்பதில் மும்முரமாக இருந்தார் எல்லோருமே அமைதியாக. ஷஊர்காவற்துறைப் பகுதியிலிருந்து மண்டைதீவு நோக்கி இராணுவம் முன்னேறி வருகின்றது...'
இந்தச் செய்தி எல்லோர் மனதிலும் பீதியைப் பலமடங்காக கூட்டியது.

## பிரமிளா

இரவோடு இரவாக கையில் எம்பிட்ட பொருட்களோடு, அங்கை போவம், இஞ்சை போவம் என்று ஒவ்வொருத்தரும் திக்குத் திக்காய் தம் உறவுகளோடு போனவரும், ஷஎன்ன செய்யப்போறான் எங்களை' எண்டுபோட்டு தம் தம் வீட்டிலே இருந்தவருமாக, எங்குமே அமைதிகளற்ற அந்தச்சூழல், இனி என்ன நடக்கப்போகிறது என்ற அச்சத்தை ஒவ்வோர் முகங்களும் பிரதிபலித்துக் கொண்டிருந்தது.

அண்டைக்குத்தான் முதல் முதலா பிறந்த ஊரைவிட்டு நாங்களும் ஓடிப்போய் அந்தோனியாற்றை நிழலில தஞ்சம் எண்டு இருந்தம். எங்களைப்போல பல ஆயிரக்கணக்கான மக்கள் அங்கை கூடியிருந்திச்சினம். என்ன சத்திய சோதனையோ தெரியாது. அண்டைக்கு இரவு நல்ல மழையும் கொட்டிச்சுது. அந்த ஆலயத்துக்கை எத்தினைபேர்தான் புகமுடியும். பிறந் த பிஞ்சுக் குழந்தை, வயோதிபர்கள் எண்டு எத்தினை ஆயிரம் பேர் அந்த மழையில நனைஞ்சம்... குளிர், கூதல் இதைவிட விடிகின்ற பொழுதை எப்படி எதிர்கொள்ளப் போகிறம் என்கின்ற பயங்கரத்தோடே, அந்த எதிரிக்கே சொந்தமான வானூர்திகளின் இரைச்சல்கள், குண்டு வீச்சுகள், துப்பாக்கிகளின் சடசடப்பு எல்லாத்தோடுமே அந்த நாள் புலர்ந்தே விட்டது. எங்கும் இரும்புக்குழாய்களோடு



அந்தக் கொடியவரின் வருகையை அறிந்த மக்கள் பெருத்த குரலில் இறைவனையே மன்றாடினார்கள்.
வந்தவர்கள் சிங்களத்தில் ஏதேதோ சொன்னார்கள் எதுவும் புரியவில்லை.
கூட்டத்தில் ஒருவர் சொன்னார் ஷ15 வயதிற்கும் 50 வயதிற்கும் உட்பட்ட ஆம்பிளையலை ஒரு பக்கமா இருக்கட்டுமாமாம்...'
எந்தத் தாய்தான் தன்ரை பிள்ளையை விடுவாள். எந்த மனைவிதான் தன் கணவனை விடுவாள். சகோதரர்களையோ, தந்தையையோ விட யார் முன்வருவாள்...
பயங்கரமான அந்தப் பொழுதுகள் ஒன்று, இரண்டாய் மெல்ல நகர்ந்தன.
அவனிற்கு ஆத்திரம் எல்லை மீறியிருக்கவேணும், துப்பாக்கியின் விசைவில் மேல்நோக்கி அசைந்தது. வானில் வெடியோசைகள்...

அந்தக்குருவிக் கூட்டத்தில் புகுந்து கொண்டன குரங்குகள். ஒவ்வொருத்தராய்ப் பிடித்து, இழுத்து, அடித்து, விரட்டி விரட்டி, இருத்தி... அத எப்பிடிச் சொல்லுறது...
இறுதியில் தம் நகர்விற்காய் பணயக் கைதிகளாக்கிச் செல்வதற்காய் அவர்களை எழுப்பியபோது, வான்முகடு கிழிய கதறிய அந்தக்குரல்கள், யார் காதிலும் ஏன் கேட்காமல் போனது. அந்தக் கொடிய நாளில்தான் என்ர அண்ணாவையும் பறிச்சின்ரு போனவங்கள்.
ஷஷகலோ... கலோ.., தமிழ் தமிழ் மெயின்"
ஷஷமெயின் சொல்லுங்கோ..."
ஷஷயார் தமிழோ..."
ஷஷஓமோம்"
ஷஷசரி வெளிக்கிடுங்கோ..." கட்டளை கிடைத்தது. மறுநிமிடமே, படகின் ஓட்டி நிலையில் நின்ற தம்பியிடம், ஷதம்பி வெளிக்கிடுவம்...' என்றபடி, இயந்திரப்பகுதிக்கு வந்து இயந்திரங்களை இயங்கு நிலைக்கு கொண்டு வந்து கொண்டிருந்த வாசுகியை பார்த்தபடி நின்ற தமிழிற்கு, அந்த நாளின் ஞாபகம் மெல்ல எட்டிப் பாத்தது. இப்படித்தான் நாங்க ஒருநாள் கடலோடிற்று வரேக்க, வழியில் சண்டை முட்டிற்று, எங்களுக்கு உதவிக்கு சண்டை வண்டியள் வேகமா வந்து கொண்டிருந்தது. அப்ப அதுவரையும் நாங்க சமாளிக்க வேணும், திடீரென்று சண்டய தொடக்கீற்றான், நாங்க எதிர்ச்சண்டை செய்து கொண்டம். அப்ப எங்கட படகின்ரை கடையார் பக்கத்தால அடிவிழுந்திட்டு, இஞ்சின் எல்லாம் வேலை செய்யாமல் போயிற்று. அதுக்கை சண்டை வண்டியள் வந்திட்டு, கடலில பெரிய சண்டை, மற்ற வண்டியள் டோறாக்களை, எங்களை நெருங்கவிடாம தடுத்துக்கொண்டே நின்டது. வாசுகி மும்முரமா இயந்திரத்தை சீர்செய்யிறதிலை நிண்டவள். அவளிற்கு உதவிக்கு நாங்கள் நிண்டம். திடீரென்று ஷடொமார்...' எண்ட சத்தம் வாசுகியைக் காணேல்லை. நான் என்னெண்டு யோசிக்கிறதிற்கை, அவள் இஞ்சினுக்கு பக்கத்தில வந்து, பலன்சில தண்ணிக்கை நிண்டுகொண்டு, இஞ்சின் பகுதிகளை கழட்டி ஒண்டில இருந்து மற்றதுக்கு கழட்டிப் பூட்டி ஒரு இஞ்சினை ஓட வச்சவள்.
அந்தச் சண்டை இறுக்கத்திக்கை தன்ரை வேலையை எவ்வளவு வேகமா செய்யஏலுமோ அவ்வளவு வேகமாகவும், நிதானமாகவும் செய்து முடிச்சதுக்கு எல்லாருமே அவளைப் பாராட்டினவை. அதுக்குப் பிறகு எனக்கும் நல்லதொரு நம்பிக்கை, எந்த இறுக்கம் எண்டாலும் வாசுகியோடை போனா, கொஞ்சம்கூட யோசிக்கத் தேவையில்லை.
இப்போது நீரைக் கிழித்துக்கொண்டு எல்லா வண்டிகளும் புறப்பட்டுவிட்டன.

ஷநாளைக்கு மாவீரர் நாள், எங்கடை கடற்கரை நீட்டுக்கு தீபம் ஏத்தவேணும்:
என்ற அரசிக்கு பின்னால் நின்று ஓய்வில நிக்கிற போராளிகள் எல்லாருமே வந்தார்கள்.
வழியில் வந்து கொண்டிருந்த சோபா, ஷஇப்ப எல்லாரும் எங்கை போறியள்...'
ஷநாங்க கடலுக்கை மீன் பிடிக்கப் போறம்...'
ஷஉண்மையாவோ அப்பிடியெண்டா நானும் வாறன்...'
ஷஓ... வா' கடற்கரை மணலில் கால் புதைய எல்லோரும் நடந்தார்கள்.
ஷஎன்னடி சோபா, இதிலை தடை போட்டிருக்கு...'
ஷஅதக்கா, நாளைக்கு மாவிரர் நாளுக்கு தீபம் ஏற்றிறதுக்கு எல்லாம் ஒழுங்குபடுத்தி வச்சிருக்கு. அதுதான் ஆடு, மாடு, நாய், கோழி போகாமத் தடை போட்டிருக்கு...'
ஷஇதாரடி செய்தது...'
ஷவேறை ஆரு தமிழக்காக்கள்தான்... அவை நேற்று உங்கட வண்டியள் போனதிலிருந்து இதுதான் வேலை...'
ஷஏன்..., நாங்க இண்டைக்கு வந்து செய்திருப்பம்தானே...'
ஷஅதக்கா, இண்டைக்கு நீங்க கடலுக்கு போன அலுப்பிலை வந்து ஏன் கஸ்டப்படுவான் எண்டுதான் ஆள் செய்திருக்கு...'

15ஆம் பக்கம் பார்க்க

www.tamilarangam.net



ஷஆ... தாங்க மட்டும், வந்து அலுப்போட நிண்டுதான் செய்திருக்கினம், வரட்டும் அவ...' என்றபடியே இடத்திற்கு வந்து சேர்ந்திருந்தார்கள்.

ஷமாவீரர் நாள்'

நவம்பர் 27 என்று பெரிதாக எழுதி, சிப்பியள் அடுக்கி எண்ணை விட்டு திரிபோட்டு எல்லாமே ரெடி, இதைவிட, இதுவரையும் கடலில வீரச்சாவடைந்த மாவீரர்களுக்கும் தீபம் தயார்ப்படுத்தப்பட்டிருந்தது.

ஷஅப்ப, இண்டைக்கு இதில ஒரு சென்றியைப் போடுங்கோ சோபா' என்றபடி முகாம் திரும்பினார்கள்.

மறுநாள் பொழுது புலர்ந்துவிட்டது. இன்னும் கொஞ்ச நேரத்திர தமிழாக்கள் வந்திடுவினம்.

கண்ணுக்கெட்டிய தூரம்வரை கடலில் எந்தப் படகையும் காணவில்லை. எல்லாப் போராளிகளுமே முகாமிற்குப் போவதும் திரும்பி வருவதும் கடலைப் பார்ப்பதுமாக இருந்தார்கள். குறித் நேரத்திற்கு பின் எவருமே, இருப்புக் கொள்ளவில்லை. எல்லோருமே கடற்கரையிலே குந்தி விட்டார்கள். அப்போதுதான் படகுகள் வந்து கொண்டிருக்காம் என்ற செய்தி தொலைத் தொடர்பின் மூலம் காதோரம் வருகின்றது. எல்லோர் முகங்களிலும் மகிழ்ச்சியின் ரேகை.

ஷஅப்ப மட்டுமட்டாகத்தான் ஆக்கள் விளக்கேற்ற வருவினம்போல இருக்கு...' என்று கூறியபடியே முகாமிற்கு நடந்தாள் அரசி.

ஷசோபா, பூக்கள் மாலையள் எல்லாத்தையும் கொண்டு வாங்கோ. பிறகு வந்தெடுக்க நேரமிருக்காது.' என்றபடி மீண்டும் கடற்கரைக்குப் போன அரசிக்கு நிலமை ஓரளுவுக்கு விளங்கிற்று.

சண்டை வண்டியள் அவசரம் அவசரமாக இநக்கப்படுது... தொடுலான் கரையை அண்டி சின்னச்சின்ன புள்ளியளாக சிறையப் புள்ளியள். அவை டோறாக்களா இருக்க வேணும். எல்லோர் முகங்களிலும் பெருத்த சோகம். கலகலப்பாக இருக்கும் அந்தக் கடற்கரை வழமையான அளவு போராளிகள் நின்றும்கூட அமைதியைப் போர்த்துக் கொண்டிருந்தது. ஆனால் புலிகளின் குரல் வானொலி மட்டும் ஒலித்துக் கொண்டிருந்தது. நேரம் 5.40 தமிழீழத் தேசியத் தலைவர் அவர்களின் மாவீரர் நாள் உரை இது. எமது மனதின் இறுக்கத்தை தளர்த்துவது போல் இருந்தது. நேரம் 5.55 ஒவ்வொரு கணமும் இப்போது எண்ணப்படுகின்றது. தூரத்தே சண்டையின் அதிர்வுகள் எதிரொலித்தபடி... எல்லாப் போராளிகளுமே கடலைப்பார்த்தபடி விளக்கேற்றும் இடத்தில் குழுமி நிற்கின்றார்கள். நேரம் 6.00 மணி ஆலய மணிகள் ஒலிக்கின்றன. திடீரென்று அந்தக்கடலில் ஓர் ஒளிப்பிளம்பு... மனதின் குமுறல்கள் விம்மல்களாக தீபங்கள் ஏற்றப்படுகின்றன...

தொலைத்தொடர்பில் நிற்கும் தம்பி ஓடி வருகிறான்.

ஷதமிழ் அக்காக்களின்ர படகு பிளாஸ் பண்ணிட்டு...' எப்படி ஏற்றுக்கொள்ளமுடியும்.

மாவீரர் நாளுக்கு தீபம் ஏத்தவேணுமெண்டு எவ்வளவு ஆசையோடை வந்திருப்பாங்கள்... இப்ப...

அதே நாளில, அந்தப் படகில போன எல்லாருக்குமா... தீபங்களை நாங்கள் ஏத்திறம்...

அந்தப் படகில் சென்ற எல்லோரது முகங்களும் மனக்கண்ணில் வந்து போகிறது.

தமிழிற்கு இரவும் பகலும் முட்டிக்கொள்ளும். அந்த அந்திப் பொழுது எப்பவுமே பிடித்தமானது. அதே அஸ்தமனப் பொழுதில அவளும் விடுதலைக்காய் அஸ்தமிச்சிட்டாள். நாளைக்கு விதையா எழுவாள்.

ஷமறைகின்ற சூரியன் இரத்தம் சிந்துவதால்தான் மறுநாளும் உதயமாகின்றான்' யாரோ ஒரு கவிஞனின் வார்த்தை என்னைத் தொடுகின்றது.

மற்ற வண்டியள் எல்லாம் கரைக்கு வந்திட்டாம்... மீண்டும் கடமை அழைக்க, எல்லோரும் கரைந்து போகின்றனர். மனதில் ஏதோ ஒரு வைராக்கியம்...

அலைகள் எப்பவும் ஓய்ந்து போறதில்ல..., அதுபோல எங்கட பயணங்களும், விடிவுக்குப் பின்னும் ஓயப்போறதில்ல...

இரவுப் பணிற்சிகளில் இருந்து இடைநிறுத்துவதாக பயிற்சிப் பொறுப்பாளர் உத்தரவிட்டார். அவள் ஏற்றுக்கொள்ளவில்லை. நியாயமான காரணங்களைச் சொல்லி மறுபடியும் தன்னைப் பயிற்சியில் சேர்த்துக் கொள்ளும்படி கேட்டாள். அவளது உறுதிக்கும், விடுதலை உணர்விற்கும் மதிப்புக் கொடுத்து மறுபடியும் சேர்த்துக் கொள்ளப்பட்டாள். அவள்தான் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கும் பயிற்சியில் நாயகியாக திகழ்ந்து கொண்டிருக்கிறாள்.

பயிற்சி ஆசிரியர் குனிந்து அவளது துப்பாக்கியை வாங்கினார். அப்போதுதான் அவளிற்கு என்ன நடந்துவிட்டது என்பத தெரிந்தது. கைகளைப் பின்னால் ஒளித்தாள். உணர்வள்ள விரல்களால் மற்றைய கையைத் தொட்டுப்பார்த்தாள். அவளிற்கு எல்லாமே புரிந்து விட்டது.

பயிற்சி ஆசிரியரை உறுத்திய விடயம் தொடர்ந்து சுட்டுக் கொண்டிருந்தவளின் கைகள் துப்பாக்கியின் அதிர்வால் கைபிடியிலிருந்து நழுவி குழல் பகுதியிலிருந்தது. சிவந்து போயிருக்கும் குழல் எப்படி அந்த உணர்வற்ற கைகளின் தசைகளைத் தின்றிருக்கும்.

ஷஷகையைக் காட்டுங்கோ...''

ஷஷஇல்லை...

எனக்கொண்டுமில்லை...''

அவளது துப்பாக்கியைப் பார்த்தார். குழல் பகுதியில் ஏதோ ஒட்டியிருப்பது தெரிந்து உற்றுப் பார்த்தார். அது அவளது கையிலிருந்து உரிந்து ஒட்டியிருக்கும் தசைகள்...

அவள் மறைத்த கையில் தசை உரிந்த இடத்திலிருந்து இரத்தம் கசிந்து கொண்டிருந்தது. அந்த இடம் புண்ணாய் இருந்தது.

அவள் பயிற்சி ஆசிரியரைப் பார்க்கிறாள். ஷஷதயவு செய்து என்னை நிறுத்த வேண்டாம்'' என்று கெஞ்சும் பார்வை... அவளைப் பொறுத்தவரை இலக்கு மட்டும் உண்மையானது. அதை அடைய வேண்டுமென்ற வலி மட்டும் நிரந்தரமானது. தாங்க முடியாது. ஏனைய வலிகள் எல்லாம் உறுதியில், கால நகர்வில் கரைந்து போகக்கூடியவையே. நம்பிக்கையான பெண்ணாய் செய்து காட்டினாள். காலம் ஒருநாள் அவள் யார்? என்ற வினாவிற்கு விடையளிக்கும்.

www.tamilarangam.net



# எங்கட



-கதைவிளம்பி-

சுற்றமேயானாலும் அவன் முற்றத்தில் ஒரு கால் வைக்குமுன் அவன் முகத்தில் சம்மதத்தை எதிர்பார்க்கும் நாகரிகம் உடையோர் நாம்.

எம் படலை தாண்டி, வாசற் படியேறி, எம் நெஞ்சின்மீது தன் சப்பாத்துக் கால்களை வைத்து, எம்மை கேள்வி பல கேட்க, இந்த சிங்கள இராணுவக் காடையர்கூட்டம் எப்போது யாரிடம் பெற்றதுஅனுமதியை? எங்கு கற்றன இந்த உயர் பண்பை? யார் புகட்டினர் இந்தநாகரிகத்தை.

நாம் அடங்கி அமுங்கிப்போன அந்தக் காலங்களில் எம்முடன் அடங்கிப்போன இரத்தமும் சதையும் உணர்வுமான கதைகள் ஆயிரம் ஆயிரம்.

அந்த ஆயிரத்தில் இதுவும் ஒன்று. திருகோணமலை மாவட்டத்தில் மூதூர் எனப்படும் பிரதேசத்தில் இடம்பெற்ற உண்மைகள் இவை.

ஆயிரம் அரைகுறை சமாதானம் வந்தென்ன ஆறுமா எம் ஆன்மாக்கள். ஆழ அல்லவோ புதைந்து விட்டது அவன் கொலை வெறி பிடித்த பார்வை.

இந்தப் பிசாசுகளின் கொலை வெறியை பதினொரு வயதில் நேரில் கண்ட பெண்ணின் கதையிது...

எங்கட அப்பா மூதூர் டவுனில ஒரு சின்ன பலசரக்கு கடை வச்சிருந்தவர் அதில் வந்த வருமானம் எங்கட குடும்பத் தேவைகளுக்குப் போதுமானதாக இருந்தது.

✦ ✦ ✦

என்ட பெயர் வனிதா. எங்கட குடும்பத்தில மொத்தம் அஞ்சுபேர் அப்ப எனக்கு பதினொரு வயது இருக்கும். ஒருநாள் விடிய அப்பா கடை திறக்க டவுனுக்கு போனார். எங்கட வீடு ஆலிம் சேனையில் இருந்தது. எங்கட வீட்டில இருந்து அரைமைலுக்கு அங்காலதான் அப்பாட கடை இருந்தது.

அப்ப, நிறைய ஆமி வந்து டவுனை ரவுண்டப் பண்ணி ஆக்கள வெளிய விடாம மறிச்சிட்டாங்க. தலையாட்டியைக் கொண்டுவந்து நிறைய ஆம்பிளைகளை பிடிச்சாங்க. அதிலதான் எங்கட அப்பாவும் பிடிபட்டவர்.

நாங்க அப்பாக்கு சாப்பாடு எடுத்துக் கொண்டு கடைக்கு போனம். அப்ப ஒரு ஆள் ஓடிவந்து சொன்னார் உங்கட அப்பாவை ஆமி பிடிச்சுக் கொண்டு Gp.s கேம்ப்' பக்கமாக (இது ஆமியின் கட்டைப்பறிச்சான் முகாம்) கொண்டு போறாங்க என்று. எங்கட அப்பாவோட இன்னும் ஏழுபேரை பிடிச்சிருந்தாங்களாம்.

நாங்க ஓடிப்போய் அம்மாட்ட சொல்லி அம்மாவோட கேம்பிற்கு ஓடிப்போய் வாசலல நின்று கத்தினம். ஆமி வந்து அம்மாக்குப் பேசினான். பேசிச் சொன்னான் ஷஉங்கட அப்பாவை நாங்க பிடிக்கல்ல போங்க போங்க' என்று விரட்டினான். நாங்க கேம்பின் பக்கத்து வளவில் போய் அதில இருந்தே கேம்பின் பின்பக்கத்தையே பார்த்துக' கொண்டு நிண்டம்.

அப்ப கொஞ்சப்பேரை அடிச்சு இழுத்துக்கொண்டு வந்தாங்க அதில எங்கட அப்பாவும் இருந்தவர். கையெல்லாம் அவருக்கு நடுங்கிக்கொண்டிருந்தது. சரம் கழண்டு விழ அதைக் கட்டிக்க ஏலாம அப்பா போனதைப் பாத்தம். உடனே நாங்க கத்திக்கொண்டு முன்னால போய் அந்தா அப்பா அந்தா அப்பா எண்டு கத்தினம் அப்ப ஆமிக்காரன் பின்னேரம் வாங்க அப்பாவைக் காட்டுறம் எண்டாங்க நாங்க வீட்ட போகல்ல கேம்பிற்குப் பக்கத்து வீட்டில தங்கியிருந்திட்டு பின்னேரம் போனம்.

ஆமிக்காரன் எங்கள விட்டுட்டு அம்மாவை மட்டும் உள்ள வரச்சொன்னான் அம்மா பயந்துகொண்டு வரமாட்டன் என்று சொன்னவ. உள்ள வந்தாத்தான் புருசனை விடுவம் என்று ஆமி அம்மாவை அதட்டினவன். நாங்களும் அம்மா போய் அப்பாவைக் கூட்டிட்டு வாமம்மா என்று அம்மாவைத் தள்ளிக் கொண்டிருந்தம்.

அம்மா அங்கெல்லாம் போகக்கூடாது என்று எங்களுக்கு சொன்னவ நாங்க போம்மா போம்மா என்று அம்மாக்கு சொல்லிக்கொண்டே இருந்தம்.

அப்ப வந்த ஆமிக்காரன் கண்ணெல்லாம் ஒரு சாதியாய் முழிச்சு அம்மாவைப் பாத்து ஷஉஉ வாடி உள்ள போடி'' என்று பேசினான். இல்ல நான் பெரிய சேர் வரும் வரைக்கும் நிண்டிட்டுத் தான் போவேன் என்று சொல்ல அவன் சப்பாத்துக் காலால எட்டி அம்மாட நெஞ்சில உதைய அம்மா போய் விழுந்திட்டா. நாங்க ஓடிப்போய் அம்மா அம்மா என்று அம்மாவைப் பிடிச்சி அழுதம். கடைசியாக அம்மா எங்களக் கூட்டிட்டு வீட்ட வந்திட்டா.

பிறகு ஒவ்வொரு நாளும் கேம்பில போய் அழுவதுதான் எங்கட வேலையாக இருந்தது. இந்தா காட்டுறம் பின்னேரம் வாங்க நாளைக்கு வாங்க எண்டு எங்கள ஏமாத்தினானே தவிர அப்பாவை மட்டும் கடைசி வரையும் காட்டல்ல.

ஒரு நாள் ஒரு முஸ்லீம் ஆள் வந்து சொன்னான்ஷஅக்கா இனி நீங்க புருசனைத்தேடி கேம்பிற்கு வரவேணாம் ஏனெண்டா உங்கட புருசன சாக்கில கட்டி புளியடிப்பக்கம் கொண்டு போட்டாங்க' என்று.

நாங்க எல்லாம் கத்திக்கொண்டு புளியடிக்கு ஓடினம் அந்தப்புளியடி Gp.s ஷகேம்பிற்கு முன்னால இருக்கு. அதுதான் ஆக்கள டயர் போட்டு எரிக்கும் இடம் அங்க போனம்.

அம்மோ...! சாக்கோட உருண்டு உருண்டு உருண்டு கத்திக் கேக்குது சாக்கோட சேத்து நெருப்பு வைச்சிட்டாங்க ஐயோ! ஐயோ! எனறு பெரிய சத்தமா கத்துறது கேட்டுது எல்லாச் சாக்கும் நெருப்போட உருளுது துடிக்குது. நாங்க இங்க இருந்து அப்பா அப்பா என்று கத்தினம் சாக்கு எரிஞ்சுகொண்டு போகும்போது அப்பாட சரத்தைக் கண்டனாங்க நாங்க இன்னும் பெரிசா கத்தினம் எங்கட அப்பாதான் எரியிறார் என்று எங்களுக்கு தெரிஞ்சிட்டு.

எங்கட அப்பாவோட இன்னும் இரண்டு பேரை எரிச்சவங்க. அவங்க யார் என்று தெரியாது எங்களால கிட்டப்போகமுடியேல்லை. சாக்கெல்லாம் உருண்டு துள்ளி கத்தி எல்லாம் ஓஞ்சி கடைசியில அப்படியே ஒரு துடிப்பும் இல்லாம எரிஞ்சிச்சு அதை அப்படியே பாத்தம். அப்பா எரியக்குள்ள அதை பார்க்க மட்டும்தான் எங்களால முடிந்தது.

ஆமிட்ட போய் எங்கட அப்பாவ உயிரோட எரிச்சது என்று சொல்லிக் கத்தினம். ஆனா அவன் உங்கட அப்பாவை நாங்க பிடிக்கவே இல்ல என்று சொல்லிட்டான்.

கடைசியாக அப்பாட மரண சேட்டிபிக்கற் இனந்தெரியாத நபர்களால் சுட்டுக்கொல்லப்பட்டார்'' என்றுதான் தந்தவங்க, நாங்க சொன்னனாங்க, ஆமிதான் அப்பாவைக் கொண்டவன், அதை நாங்க பார்த்தம் என்று அப்டிச் சொன்னா நட்டஈடு கிடைக்காது அப்படிச் சொல்லக்கூடாது என்று பொலிஸ்காரன் சொன்னவன். அதுக்குப் பிறகு எங்கட குடும்ப கஸ்டம், ஆதாரமான அப்பா இல்லாததால் ஏற்பட்ட கஸ்டம். எல்லாத்தாலும் ஷஷஇனம் தெரியாதவர்களால் சுடப்பட்டார்'' என்று சைன் வச்சித்தான் நட்டஈடு எடுத்தம். இது 87ஆம் ஆண்டு 5ஆம் மாதம் 27ஆம் திகதி நடந்தது. இந்தக் காலத்தில நிறையப் பேருக்கு இப்படித் தான் மரண ஷசேட்டிபிக்கற்' குடுத்தவங்க.

இதுக்குப் பிறகு கிழிஞ்ச வெள்ளைச் சட்டையும் முருக்கங்கீரையும் சோறும்தான் எங்கள வளர்த்தது.


எங்களின் ஊருக்குள் வந்து, எங்கள் கோயிலுக்குள் சப்பாத்துக் கால்களுடன் நுழைந்து மூலஸ்தானத்தின்மீது ஏறி நின்று எங்களின் உயிரின் ஆழத்தை துப்பாக்கி முனை கொண்டு தோண்டிப்பார்த்த இந்தக் கயவர் கூட்டத்தை எம் வாழ்விடங்களை விட்டுவிட்டு ஷஷபோ'' என்கிறோம் இதிலென்ன அநியாயம். இந்தக் காடையர் இங்கு இருப்பதற்கு என்ன நியாயம்.

ஒரு நாள் வரும் ஈழத்து தமிழர் எல்லாம் திரட்சி கொண்டு பொத்துவிலில் இருந்து பொலிகண்டி வரைக்கும் வலை வீசி இந்த வானரப் படையை ஊர்வலமாக A9 பாதை வழியாக வவுனியாவின் கடை எல்லைவரை சென்று வழியனுப்பி அவன் கைதொட்ட பொருட்களையெல்லாம் அந்த வாசலில் குவித்து எரித்து சாம்பலாக்கி அதை குழிதோண்டி புதைத்து விட்டு எங்கள் கடல்நீரை வாரி எடுத்து அவன் பாதம் பதிந்த எம் மண்ணைக்கழுவி புதிதாய்க் கோலமிட்டு சந்திகளிலும் தெருக்களிலும் புதுப்பானைகள் வைத்து பொங்குவோம் எம் விடுதலைப் பொங்கலை. அன்று ஆடுவோம் விடுதலைக் கூத்தை.

அந்த நாளை கனவு கண்டபடியே ✦ எங்கள் நாட்கள் நகரும்.

www.tamilarangam.net





# மொசாம்பிக் நாட்டி... பெண் சமத்துவ நிலை ... ஒரு பார்...

மனிதர்களாகப் பிறந்த ஒவ்வொரு வனுக்கும் வரையறுக்கப்பட்ட சில அடிப்படை உரிமைகள் உண்டு. அந்த உரிமைகளை அனுப விக்கும் சக்தியும் அவனுக்கு உண்டு. ஆனால், எல்லோருமே தமக்குரிய உரிமைகளை ஒரேவிதத்தில் அடைந்து கொள்வதில்லை. அதற்கு புறக்காரணி களும், அகக் காரணிகளும் பலவுண்டு. ஒவ்வொரு மனிதனும் வாழும் சூழல்தான் இதில் முக்கிய பங்கை வகிக்கின்றது. இங்கு குறிப்பிடப்போகும் மொசாம்பிக் நாடானது மிகவும் வறுமைக்குட்பட்ட ஓர் ஆபிரிக்க நாடாகும். அங்கு வாழும் இருபாலாருக்குமிடையில் உரிமைகளை அனுபவிப்பதில் பல்வேறு பாரபட் சங்கள் நிலவுகின்றன.

பால்நிலை, பால்நிலை தொடர்பான உறவுகள் ஆகிய இரண்டுமே பெண்கள், ஆண்கள் ஆகிய இருவருக்குமிடையிலான சமத்துவமின்மையை விபரிக்கவும், அதுபற்றி விவாதிக்கவும் அடிப்படைக் கருவிகளாக உள்ளன. பால்நிலை உறவுகள் என்பது கலாசாரம், சமூகம், பொருளாதாரம், அரசியல் போன்ற காரணிகளால் உருவாக்கப்படுகின்றன. இவ்வாறான காரணிகள் மாற்றமடையும்போது பால்நிலை உறவுகளிலும் மாற்றங்கள் ஏற்படுகின்றன. அத்துடன் பெண்களுக்கும், ஆண்களுக்கும் இடையில் மிகப் பெரியளவில் சமத்துவநிலையை உருவாக்கவும், மேற்போந்த காரணிகள் காலாக உள்ளன.

மொசாம்பிக்கில் பெண்கள் இரட்டைச் சுமைகளை எதிர்நோக்கும் அதேவேளை ஆண்கள் வாழ்வின் அதிக சுகபோகங்களை அனுபவிப்பதில் கழிக்கின்றனர். இந்தப் பெண்கள் கடுமையான தொழிலாளிகளாகவும், அதேவேளையில் வீட்டுப் பணிகளைச் செய்யவேண்டிய கட்டாயதேவையும் அவர்களின் மேல் சுமத்தப்பட்டுள்ளது. ஆகவே, மொசாம்பிக்கில் நிலவும் பால்நிலை உறவுகள் தொடர்பான கல்வி மீள ஆராயப்பட்டு திருத்தப் படவேண்டிய தேவையும் ஏற்பட்டுள்ளது.

05 நூற்றாண்டுகளுக்கு மேலாக போர்த்துக்கேயரின் காலனித்துவ நாடாகவிருந்த மொசாம்பிக் 1975 இல் சுதந்திரத்தைப் பெற்றுக் கொண்டபோதிலும், தனிமனித சுதந்திரம் என்பது அங்கு கேள்விக்குரிய ஒன்றாகவே உள்ளது. நீண்டகால உள்நாட்டுப் போரின் காரணமாகவும் மொசாம்பிக் மக்கள் பெரும் பிரச்சினைகளை எதிர்நோக்கியுள்ளனர்.

பெண்கள் சமூகத்தில் சகல வகையான தொழில்களில் ஈடுபட்டு அதேவேளை வீட்டுப் பணிகளைச் செய்தாலும், கூடுதலான அவர்களின் பங்களிப்பானது தாய்மார், பராமரிப்பாளர் என்ற நிலையிலேயே அதிகம் பார்க்கப்படுகிறது. ஆனால் வீட்டுப்பணிகள் என்பது நாட்டின் பொருளாதாரத்தில் கணக்கிடப்படுவதில்லை. ஆனால் இத்துறையும் பொருளாதாரத்தில் குறிப்பிடப் படவேண்டிய ஒன்றாகும்.

கடந்த தசாப்தத்திலிருந்து மொசாம்பிக்கின் பொருளாதாரம் ஒரு வலுவான நிலையில் உள்ளது. ஆனால் மொசாம்பிக் பெண்கள் குறைந்த வளமுள்ள வர்கள், போதிய அறிவு, ஆளுமை அற்றவர்கள். தீர்மானம் எடுப்பதில் குறைந்தளவிலேயே பங்குபற்று கின்றவர்கள் என்றே மனித அபிவிருத்தி சுட்டிகள் காட்டுகின்றன. இவ்வாறான காரணிகள் பெண்களின் ஆளுமைவிருத்திக்கும், பொருளாதாரத்திற்கும் அவர்களின் மேம்பட்ட நிலைக்கும் தடைக்கல்லாக உள்ளன. இது குறிப்பாக கிராமிய மட்டப்பெண்கள், குடும்பத்தைத் தாங்கும் பெண்கள், ஆகியோருக்கு இடையில் கூடுதலாக உள்ளது. பால் நிலைச் சமமின்மையை வெளிக் கொணர்வதற்கு இது தொடர்பான விடயம் அந்நாட்டின் பொருளாதாரக் கொள்கையில் உள்ளடக்கப் படவேண்டும்.

பெண்தலைமைக்குடும்பங்கள், ஆண் தலைமைக்குடும்பங்களை விட ஏழ்மைநிலையில் இல்லை என்பதை மரபுரீதியான சாட்சியங்கள் எடுத்துச் சொல்கின்றன. மொசாம்பிக்கின் சகல பிரதேசங்களிலும் பெரும் பான்மையான கிராமிய மக்கள் விவசாயத்திலேயே ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். மொசாம்பிக் பெண்கள் நிலத்துக்குச் சொந்தக்காரிகளாக இருப்பதையும், அவர்களின் தொழினுட்ப அறிவு விருத்தியையும் அந்நாட்டின் பால்நிலைஉறவு தடுக்கிறது. இதன் காரணமாக, உற்பத்தியில் ஈடுபடும் பெண்களின் தொகை மிகவும் குறைவாகவே உள்ளது. இதன் விளைவுகளானது, ஆழமான வறுமைக்கும், இயற்கை வளங்களைப் பயன்படுத்துவதைக் குறைப்பதற்கும் காரணமாக உள்ளன.

கல்வியும், சுகாதாரமும் மொசாம்பிக் அபிவிருத்தியில் அடிப்படைக் காரணிகளாக உள்ளன. இந் நாட்டின் எழுத்தறிவு வீதம் மிகவும் குறைவாகும். இங்கு ஆண்களை விடப் பெண்களே அதிகம் கல்வியறிவற்றவர்களாகவும், அதிலும் கூடுதலான பெண்கள் கிராமப்புறங்களிலேயே வாழ்ந்து வருகின்றனர். ஏனெனில் பாரம்பரிய வழக்கங்கள் கிராமப்புறப் பெண்கள் பாடசாலைக்குச் செல்வதைத் தடுக்கின்றன. இதனால் குறைந்தளவு பெண்களே பாடசாலைக் கல்வியை முழுமையாகப் பெற்றுக்கொள்கின்றனர். ஆனாலும் இக்குறைந்தளவு பெண்கள்கூட தமது விருப்புக்கேற்ப பாடங்களைத் தெரிவுசெய்யமுடியாத நிலையிலுள்ளனர்.

ஆதரவற்ற பெண் பிள்ளைகள் குழந்தைத் தொழிலாளிகளாக வேலை செய்யவேண்டிய நிர்ப் பந்தத்துக்குள் உள்ளா வதால், அவர்கள் பணி செய்யும் இடங்களில் பல் வேறுபட்ட பிரச்சினை களுக்கும், துன்பங் களுக்கும் முகங்கொடுக்க வேண்டியவர்களாகின்றனர்.



இந்நாட்டில் நகர்ப்புற மக்கள், கிராமப்புற மக்கள் ஆகியோருக்கிடையே பல்வேறு வேறுபாடுகள் காணப்படுவதுடன், சமமின்மையும் நிலவுகின்றது என ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். உதாரணமாக, சாம்பெசியா (Zambezia) எனும் இடத்தில் பெண்களின் ஆயுள்எதிர்பார்ப்பு 38 ஆண்டுகளாகவும், மப்புற்றோ சிற்றி (Maputo City) யில் 61.8 ஆண்டுகளாகவும் உள்ளன. குழந்தைகளின் இறப்பு விகிதமும் இதையொத்ததாகவே உள்ளது.

சுகாதாரம் பற்றிய அறிவின்மையே இதற்கான முக்கிய காரணமாகும். 90வீதத்துக்கும் அதிகமான குடும்பப்பெண்கள் சுத்திகரிக்கப்படாத நீரையே பயன்படுத்துகின்றனர். அத்துடன் HIV/AIDS போன்ற கொடிய நோய்களின் தாக்கமும் இங்கு அதிகம் உள்ளது. ஆண்கள் ஒன்றுக்கு மேற்பட்ட திருமணங் களைச் செய்தல், விதவைகளின் எண்ணிக்கை அதிகரிப்பு, ஏழ்மை போன்றவை இக்கொடிய நோய்கள் உருவாக வழிவகுக்கின்றன. இந்நோய்களின் தாக்கத்தால் கர்ப்பிணிப்பெண்கள் அதிகளவில் இறக்கின்றனர். இதன் காரணமாக, ஆதரவற்ற பிள்ளைகளின் தொகை அதிகரிக்கின்றது. குறிப்பாக ஆதரவற்ற பெண்பிள்ளைகள் குழந்தைத் தொழி லாளிகளாக வேலைசெய்யவேண்டிய நிர்ப்பந்தத் துக்கு உள்ளாவதால், அவர்கள் பணி செய்யும் இடங்களில் பல்வேறுபட்ட பிரச்சினைகளுக்கும், துன்பங்களுக்கும் முகங்கொடுக்க வேண்டியவர் களாகின்றனர்.

1990 இல் மாக்சிச ஆட்சியமைப்பை உள்ள டக்கிய ஒரு தசாப்தகாலமாக நிலவிய யாப்பை பல கட்சிப் பாராளுமன்றமாக மாற்றுவது என்ற தீர்மானம் எடுக்கப்பட்டது. ஆனால் இந்தத் தீர்மானம் எடுப்பதில் பங்குபற்றும் உரிமை இருந்தபோதிலும் பெண்களின் பங்களிப்பு மிகக் குறைவாகவே இருந்தது.

ஒரு நாட்டை ஆளும் உரிமை ஆண், பெண் வேறுபாடுகளுக்கப்பால் சகலருக்கும் இருக்கின்றது என பெயரளவில் மட்டும் ஏற்றுக்கொள்ளும் இந்த உலகம் அதைச் செயலில் காட்ட இன்னமும் தயங் குவது வேதனைக்குரிய விடயமே. சொசாம்பிக் பெண்கள் மட்டுமல்ல முதலாம் உலக மண்டலங்களில் வாழும் பெண்களும் இதேபோன்ற பல்வேறு பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்கின்றனர். ஆனால் அவற்றுள் பல அச்சேறாமல் அழிந்து போய் விடு கின்றன. வறுமையிலும் செம்மையாக தம்வாழ்வைப் பயனுள்ளதாக மாற்றி இவ் உலகினின்றும் மறைந்தும் மக்களின் நெஞ்சை விட்டகலாத பெண்மணிகளின் வரலாறுகளையும் நாம் அறிந்துள்ளோம்.

மொசாம்பிக் பெண்கள் இன்று இவ்வாறான துன்பங்களை எதிர்நோக்கினாலும் அவர்களின் பிரகாசமான எதிர்காலம் அவர்களின் கைகளில்தான் தங்கியுள்ளது. அவர்கள் படும் துன்பங்களையும் துயரங்களையும் வெறும் சொற்களில்மட்டும் விபரிக்கமுடியாதாயினும்,பல ஆண்டுகளுக்கு முன்னர் அவர்கள் இருந்த நிலையிலும் விட தற்போது நல்லநிலையிலேயே வாழ்ந்துவருகின்றனர் என்பதை அறியக்கூடியதாக உள்ளது.

பாரதி